இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 19 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 11 – திங்கள்கிழமை 28 ஆகஸ்ட் 2023 – திருச்சி ★★ 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 19: Thiruvalluvar Year - 2054 - Aavani 11 - Monday 28 August 2023 - Trichy ★★ 12+8 Pages ₹5.00

## வேளாண் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க

# வேளாண் திட்டங்களில் சிறப்பு கவனம் தேவை!

## "நாம் என்றும் மக்கள் ஊழியர்களே!" நாகை ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, அரசு துறைச் செயலாளர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாகை, ஆக.28-

**"வேளாண் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க வேளாண் திட்டங்களில் சிறப்பு கவனம் தேவை" என்றும் "நாம் என்றும் மக்கள் ஊழியர்களே!" என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றும்போது வலியுறுத்தினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நானும் இதே டெல்டா மாவட்டத்துக்காரன்தான். அந்த வகையில், தமிழ்நாட்டு முதலமைச்சராக மட்டுமில்லை, இந்த டெல்டா மாவட்டத்தின் பிரதிநிதி என்கின்ற உணர்வோடும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளேன்.

**டெல்டா மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள்!**

இந்த மாவட்டங்கள் பொதுவாகவே வேளாண்மை சார்ந்த மாவட்டங்கள். அதனால்தான், வரலாற்றுக்காலம் தொட்டு "தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்" என்ற

> **"இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னால், நிலுவையில் இருக்கின்ற சாலைப் பணிகளை முடித்து, மக்களுடைய இன்னல்களைப் போக்கவேண்டும். எனவே, ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையில், விரைந்து செயல்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலக்கட்டத்திற்குள் எல்லா பணிகளையும் முடிப்பீர்கள் என்று நம்புகிறேன்."**

சிறப்பை இந்தப் பகுதி பெற்றிருக்கிறது. இந்த மாவட்டங்களுடைய வளர்ச்சி என்பது வேளாண்மை சேர்த்து மற்ற ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைந்தாக வேண்டும். நாம் வளர்த்தாக வேண்டும். அத்தகைய வளர்ச்சிக்காக நமது அரசு இந்த மாவட்டங்களில் தொழில், வர்த்தகம் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதின் அவசியத்தை உணர்ந்து பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

நான் அடிக்கடி குறிப்பிடுவது போல், எந்த ஒரு திட்டமும் அதனுடைய நோக்கத்தை அடைய, தொடர்ச்சியான ஆய்வுகள் அவசியம். அந்த அடிப்படையில்தான், மக்களுக்கு நெருக்கமாகச் சென்று, திட்டங்களுடைய செயலாக்கத்தை கண்காணிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, "கள ஆய்வில் முதலமைச்சர்"என்ற இந்தத் திட்டத்தை கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கினேன்.

அரசினுடைய திட்டங்களின் செயலாக்கத்தைச் சந்திக்கக் கூடிய சவால்கள் மற்றும் அது தொடர்பாக, நீங்கள் தரக் கூடிய ஆலோசனைகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்கின்ற நோக்கத்தில்தான், மாவட்ட அளவில் இத்தகைய ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

பொதுவாகவே, முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள் துறைச் செயலாளர்களிடம்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்





**தி.மு.க. இளைஞர் அணி**
**இரண்டாவது மாநில மாநாடு**

## தி.மு.க. இளைஞர் அணி

## இரண்டாவது மாநில மாநாடு!

**தலைமைக் கழக அறிவிப்பு**

**2007ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று கழக வரலாற்றில் முத்திரைப் பதித்து, திருப்புமுனை ஏற்படுத்திய தி.மு.க. இளைஞர் அணி முதல் மாநில மாநாட்டினை தொடர்ந்து,**

**வருகிற 17–12–2023 ஞாயிற்றுக்கிழமை அன்று "தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு" சேலத்தில் நடைபெறும்.**

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை–18.**
**நாள் 26–8–2023.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

## பெங்களூரு – கேரளா விமான கட்டணம் பல மடங்கு உயர்வு!

*பெங்களூரு, ஆக. 28 -*

*ஓணம் பண்டிகையையொட்டி சொந்த ஊருக்குச் செல்லும் பயணிகள் கூட்டம் அதிகரித்து உள்ளதால் பெங்களூரு - கேரளா இடையே விமான கட்டணம் பல மடங்கு உயர்ந்துள்ளது.*

*ஓணம் பண்டிகை நாளை 29ந் தேதி (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. இதனால் பெங்களூரு மற்றும் அதை சுற்றி உள்ள மாவட்டங்களில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள் தங்கள் சொந்த ஊரில் குடும்பத்துடன் ஓணம் பண்டிகையை கொண்டாட கேரளாவுக்கு புறப்பட்டு செல்கிறார்கள்.*

## நிலவைத் தொடர்ந்து சூரியன்!

# செப்.2ல் ஆதித்யா விண்கலத்தை செலுத்துகிறது இஸ்ரோ!

ஸ்ரீஹரிகோட்டா, ஆக. 28 –

ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. ராக்கெட் மூலம் ஏவ திட்டமிடப்பட்டு உள்ளது.

இஸ்ரோவின் நிலவுத் திட்டமான சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆய்வுப் பணியை தொடங்கி உள்ளது.

இதையடுத்து அடுத்த கனவுத் திட்டமான சூரிய திட்டத்தை செயல்படுத்தும் பணியில் இஸ்ரோ முழு வீச்சில் ஈடுபட்டுள்ளது.

சூரியனை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆதித்யா எல்1 விண்கலத்தை செப்டம்பர் 2ஆம் தேதி விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக அகமதாபாத்தில் உள்ள விண்வெளி பயன்பாட்டு மைய இயக்குனர் நிலேஷ் எம்.தேசாய் கூறுகையில்,

ஆதித்யாஎல்1 தயார் நிலையில் உள்ளதாகவும், செப்டம்பர் 2ம் தேதி விண்ணில் ஏவ வாய்ப்பு உள்ளது என்றும் கூறினார்.

ஆதித்யா விண்கலத்தின் முதல்கட்ட சோதனைகள் கடந்த 2020ம் ஆண்டே நடத்தி முடிக்கப்பட்டது. இந்த விண்கலம், ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. ராக்கெட் மூலம் ஏவ திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த விண்கலம் 1,475 கிலோ எடை கொண்டது. பூமியில் இருந்து சுமார் 1.5 மில்லியன் கி.மீட்டர் தூரம் கொண்ட சூரியனின் லெக்ராஞ்சியன் புள்ளி 1ல் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இந்த விண்கலம் மூலம் சூரிய புயல்கள், பூமியில் ஏற்படும் மாற்றங்கள், ஒளிக்கோளம் மற்றும் குரோமோஸ்பியர் ஆகியவற்றை ஆய்வு செய்து பூமிக்கு தகவல்களை பெற முடியும்.

## சேலம் மாநாட்டை ஒரு சிறந்த மாநாடாக நடத்திட

# இளைஞர் அணியினர் குடும்பத்தோடு திரண்டு வாரீர்!

## திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**திருவாரூர், ஆக.28-**

**“சேலத்தில் நடைபெறும் கொள்கை மாநாட்டிற்கு இளைஞர் அணியினர் குடும்பத்தோடு திரண்டு வாரீர்” என்று கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் உரையாற்றும் போது வேண்டுகோள் விடுத்தார்.**



கழக இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாடு வரும் டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெற உள்ள நிலையில், இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வருவாய் மாவட்டம் வாரியாக சுற்றுப்பயணம் செய்து மாநாட்டுக்கு இளைஞர்களை தயார்படுத்தும் வகையில் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி வருகிறார்.

திருவாரூர் கலைஞர் கோட்டம் அருகே நேற்று முன்தினம் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“இந்த நேரத்திலே கழகத்தினருக்கு, இளைஞர் அணியினருக்கு என்னுடைய ஓர் அன்பு வேண்டுகோள். நான் கலந்து கொள்கின்ற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், பட்டாசு வெடிப்பதை தயவு செய்து தவிர்த்துவிட வேண்டும் என்று பலமுறை கூறியிருக்கின்றேன்.

இருந்தாலும் ஆர்வ மிகுதியால் பட்டாசு வெடிக்கிறீர்கள். அதனால், யாருக்கும் எந்தப் பயனும் கிடையாது. தயவுசெய்து இந்தப் பட்டாசு வெடிப்பதைத் தவிர்த்துவிடுங்கள். இந்த நிகழ்ச்சியை நிறையக் கட்சிக்காரர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள், கழக நிர்வாகிகள் பார்த்துக்கொண்டு இருப்பார்கள். கேட்டுக்கொண்டு இருப்பார்கள்.

> **“இங்கே நீட் தேர்வை ஒழிக்கிறதுக்கு இந்த ஒரு உதயநிதி பத்தாது. இங்க வந்திருக்கக்கூடிய நீங்க அத்தனை பேரும் உதயநிதியா மாறி போராட்டக் களத்துக்கு வரணும். இது என்னுடைய தனிப்பட்ட விஷயங்களுக்காக நடத்துகின்ற போராட்டம் கிடையாது. மாணவர்களுடைய கல்வி உரிமைக்காக மக்களுக்காக நடத்துற போராட்டம். எப்படி இந்தி திணிப்பிற்குத் தலைவர் கலைஞர் போராட்டத்தில் இறங்கினாரோ, எப்படி எமர்ஜென்சி காலத்துல மிசா காலத்துல நம்முடைய தலைவர் அவர்கள் களத்தில் இறங்கினாரோ, அதே மாதிரி இந்த நீட் தேர்வு ரத்து செய்வதற்காக நடைபெறும் போராட்டத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்குவதற்குத் தயாராக இருக்கணும்.”**

### பட்டாசு வெடிப்பதை நிறுத்துங்கள்!

அடுத்த ஐந்து நாட்கள் இந்த டெல்டா பகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செல்கின்றேன். தயவு செய்து பட்டாசு வெடிப்பதை, பொன்னாடை போர்த்துவதை, பூங்கொத்து கொடுப்பதைத் தவிர்த்துவிட்டு, மாநாட்டுக்கு நிதி அளியுங்கள்.

நூறு ரூபாய், 200 ரூபாய் என்றாலும் கூடப் பரவாயில்லை. இதை நான் பலமுறை சொல்லியிருக்கின்றேன். மீண்டும் திருவாரூர் மாவட்டத்திலே சொல்வதை நான் என்னுடைய கடமையாக நினைக்கின்றேன்.

அதே நேரத்தில் நன்றி கூறிக் கொள்கின்றேன். மாவட்டக் கழகத்தின் சார்பாக அண்ணன் கலைவாணன் அவர்கள் 15 இலட்சம் ரூபாய் மாநாட்டு நிதியாக அளித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றி. அதேபோல் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் 5 லட்சம் ரூபாய் நிதி அளித்து இருக்கிறார்கள். அதற்கும் நன்றி.

### மாநாட்டுக்கு நிதி!

இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாட்டுக்காக மாவட்ட வாரியான செயல்வீரர்கள் கூட்டம், ஒரு வாரத்துக்கு முன்பு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்தான் முதன்முதலில் துவங்கியது. அங்கே மாநாட்டு நிதியாக ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

சிறிது நேரத்துக்கு முன்பு தஞ்சாவூர் வடக்கு, தெற்கு மற்றும் மத்திய மாவட்ட இளைஞர் அணியினருக்கான செயல்வீரர்கள் கூட்டம் தஞ்சாவூரிலே நடந்தது. அங்கு 50 இலட்சம் ரூபாய் மாநாட்டு நிதியாக அளித்து இருக்கிறார்கள்.

நான் 15 லட்சம் ரூபாயைக் குறைவாக சொல்லவில்லை. எனக்குத் தெரியும் மற்ற மாவட்டங்களை விட, நீங்கள் தான் அதிக உணர்வோடு மாநாட்டுக்கு வந்து, அந்த மாநாட்டைச் சிறப்பிக்கப் போகிறீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இரண்டாம் கட்டமாகக் கொடுத்தால், நான் வாங்க மறுக்க மாட்டேன் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### இளைஞர் அணி சார்பாக முதல்வருக்கு வாழ்த்து!

முத்தமிழறிஞர் கலைஞருடைய நூற்றாண்டில் இளைஞர் அணியினுடைய இந்த இரண்டாவது மாநில மாநாட்டை சேலத்தில் நடத்துகின்ற வாய்ப்பை கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு வழங்கி இருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்தில் இளைஞர் அணி சார்பாக, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வோம்.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளுக்காக, செயல்வீரர் கூட்டங்களை முதல் கட்டமாக பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த வாரம் நடத்தி முடித்தோம். அதன் பிறகு, இன்றைக்கு, மாலை தஞ்சையிலே செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி முடித்துவிட்டு, தற்பொழுது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த திருவாரூர் மாவட்டத்தில், இந்த இளைஞர் அணி கூட்டம் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### உலகம் பாராட்டும் காலை சிற்றுண்டி திட்டம்!

இன்று ஆகஸ்ட் 25 ஆம் தேதி வரலாற்றில் மிக மிக முக்கியமான ஒரு நாள். 1940 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24, 25 தேதிகளில் இதே திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் மண்ணில் நீதிக்கட்சி மாநாட்டில், தந்தை பெரியார் அவர்கள் நீதிக் கட்சியினுடைய தலைவராகத் தேர்வு செய்யப்பட்டது இதே ஆகஸ்ட் 25ஆம் தேதிதான். இதே ஆகஸ்ட் 25ல் இன்னொரு முக்கியமான வரலாற்று நிகழ்வு ஆகஸ்ட் 25. இந்தியாவிலேயே முதல்முறையாக, இந்தியாவுக்கே ஒரு முன்னோடித் திட்டமாக, ஒட்டுமொத்த உலகமும் பாராட்டக்கூடிய திட்டமாக ‘முதலமைச்சருடைய காலை சிற்றுண்டித் திட்டம்’ இன்று காலை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 31 ஆயிரம் அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய 17 லட்சம் மாணவர்கள், இன்று முதல் காலை உணவை பள்ளிக்கூடம் வந்து சாப்பிட உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியை நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் கலைஞர் பிறந்த திருக்குவளையில் தொடங்கி வைத்திருக்கிறார்கள். நான் என்னுடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் இந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்துவிட்டு, மாணவர்களுடன் சாப்பிட்டுவிட்டு, வருகிறேன். இந்தத் திட்டத்தில் மாணவர்கள் எவ்வளவு பயன் அடைகிறார்களோ அதே அளவுக்கு நானும் பயன் அடைந்திருக்கிறேன்.

இத்திட்டம் முதல் கட்டமாக 1,500 பள்ளிகளில் துவங்கிவைத்தார்கள் நம் தலைவர் அவர்கள். நான் கடந்த ஒரு வருடமாகச் சிறப்புத் திட்டத்தின் செயலாக்கத்துறையினுடைய அமைச்சர் நான். மாநிலத்தின் எந்த மாவட்டத்துக்குப் போனாலும் அரசு நிகழ்ச்சி, கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும், என்னுடைய காலை உணவு, அந்தப் பள்ளி மாணவர்களோடுதான் உட்கார்ந்து சாப்பிடுவேன்.

உணவின் தரம் சரியா இருக்கிறதா, சரியான நேரத்துக்கு உணவு தரப்படுகிறதா? இந்தத் திட்டத்தினால் மாணவர்களுடைய வருகைப் பதிவு அதிகரித்துள்ளதா என்று ஆய்வு செய்வேன். அதனால் சொல்கிறேன். மாணவர்கள் எந்த அளவுக்கு இந்தத் திட்டத்தால் பயனடைந்திருக்கிறார்களோ, நானும் அதே அளவுக்குப் பயனடைந்து இருக்கிறேன்.

இப்படி ஒரு அருமையான திட்டம். அத்தனை மாநில முதலமைச்சர்களும் பாராட்டுகிறார்கள். அத்தனை மாணவர்களும் பாராட்டுகிறார்கள். முன்பு பல குழந்தைகள் பசியோடு வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அந்த நிலை மாறியிருக்கிறது. இப்போது நம் மாணவர்கள் நன்றாக தெம்பாக சாப்பிட்டுவிட்டு தைரியமாகப் போய் படிக்க ஆரம்பிக்கின்றனர்.

இந்தத் திட்டத்தை பெற்றோர்களின் மனநிலையில் இருந்து யோசித்துப்பாருங்கள். பல பெற்றோர் காலையில் வேலைக்குப் போறதுக்கு முன் சமயங்களில் சமைப்பதற்கு நேரம் இருக்காது. இப்போது அந்தப் பெற்றோர்கள் நம்பிக்கையோடு மாணவர்களை பள்ளிக்கு அனுப்பிவிட்டு தைரியத்தோடு வேலைக்குப் போறாங்க.

## கேலிக் கூத்தான அ.தி.மு.க. மாநாடு!

இந்த அரசு, கழக அரசு, திராவிட மாடல் அரசு என்னுடைய குழந்தையைப் பாத்துப்பாங்க. வெறும் வயிற்றோடு, பசியோடு உட்கார வைக்க மாட்டாங்க என்ற அந்த நம்பிக்கையை நம்முடைய தலைவர் அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில்தான் இந்த நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. நம்முடைய மாநாட்டிற்கான செயல்வீரர்கள் கூட்டம் கலைஞர் கோட்டத்தில், நம்முடைய தலைவர் அவர்கள் திறந்து வைத்த முத்தமிழறிஞர் கோட்டத்தில் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் ராஜா அவர்களுக்கும், மாவட்ட கழகச் செயலாளர் அவர்களுக்கும், மாநில துணைச் செயலாளர்கள் இளையராஜா, ஆனந்தகுமார் அவர்களுக்கும், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அத்தனை பேருக்கும் வந்திருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றி.

ஏனென்றால், இரண்டு நாட்களுக்கு முன்புதான்இந்த நிகழ்ச்சியை இங்கே நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டு, இரண்டே நாட்களில் இவ்வளவு சிறப்பாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்றால் நீங்கள் ஒவ்வொருவரும் செயல்வீரர்கள்தான்.

### குடும்பத்தோடு கலந்து கொள்வீர்!

நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் என்ன கட்டளையிடுகிறாரோ, கட்சி என்ன சொல்கிறதோ, அதைச் செய்கிறவர்கள். செய்து முடிப்பவர்கள் தான் செயல்வீரர்கள்.

இங்கே தகவல் தொழில்நுட்ப அணியினுடைய செயலாளர் இருக்கிறார். அவர்தவறாகநினைத்துக்கொள்ள மாட்டார். நம்முடைய கழகத்தில் பல்வேறு அணிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 23 அணிகள் இருக்கின்றன.. அந்த 23 அணிகளில் தலைமை சொல்வதை முதலில் யார் செய்வது என்றால், அது இந்த இளைஞர் அணி தான். அதை அவரும் ஒப்புக் கொள்வார் என்று நினைக்கின்றேன்.

அந்தவகையில் இங்கே இருக்கக்கூடிய ஒவ்வொருவரும் செயல்வீரர் தான். அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்களும் மிகச்சிறந்த ஒரு செயல்வீரர், நம்முடைய டி.ஆர்.பி. ராஜா ஒரு மிகச் சிறந்த செயல்வீரர், இளையராஜா ஒரு செயல்வீரர். இங்கே வந்திருக்கக் கூடிய அத்தனை இளைஞர் அணி தம்பிமார்கள் ஒவ்வொருவரும் செயல்வீரர்கள். அதையெல்லாம் நிரூபிக்கக்கூடிய மாநாடுதான் சேலத்தில் டிசம்பர் மாதம் நடக்கப் போகிற அந்த மாநாடு.

மாநாட்டுக்கான தேதியை கழகத் தலைவர் அவர்கள், நாளையோ அல்லது மறுநாளோ அறிவிப்பார்கள். அந்த மாநாட்டை வெற்றி மாநாடாக ஆக்க வேண்டுமென்றால், நீங்கள் ஒவ்வொருவரும் அந்த மாநாட்டிற்கு வர வேண்டும். நீங்கள் மட்டும் அல்ல, இளைஞர் அணி தம்பிமார்கள் அத்தனை பேரையும் உங்கள் குடும்பத்தோடு நீங்கள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டும்.

கலைஞர் அவர்கள் இந்த திருவாரூர் வீதிகளில்தான் இளைஞராகத் தன்னுடைய அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். மாணவர் அமைப்பு, `தமிழ்நாடு மாணவர் மன்றம்' என கலைஞரின் பொதுவாழ்வில் தொடக்கப் புள்ளியாக இருந்தது இந்தத் திருவாரூர் மண். அப்படிப்பட்ட மண்ணில் இந்தச் செயல்வீரர் கூட்டத்தை நாம் துவங்கியிருக்கின்றோம்.

### கலைஞர் மாவட்டம்!

எப்படிப் பல்வேறு அணிகளில் முதன்மையான அணி என்று நான் சொன்னேனோ, அதேபோல் நம் அணியின் இன்னொரு பெருமையை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தியாவிலேயே முதன்முதலில் ஒரு இயக்கத்திற்கு, இளைஞர் அணி என தொடங்கியதும் திராவிட முன்னேற்ற கழகம்தான். தொடங்கியவர், நம்முடைய தலைவர் அவர்கள். தொடங்கிய ஆண்டு 1980.

திருவாரூர் மாவட்டம் என்றால் தி.மு.க, தி.மு.க என்றால் திருவாரூர் மாவட்டம் என்பது தமிழ்நாட்டுக்கே தெரியும். கலைஞர் அவர்கள் கடைசியாக இரண்டு முறை இந்தத் திருவாரூரில்தான் நின்று வென்று, சட்டமன்றத்துக்கு சென்றார். திருவாரூர் மாவட்டம் என்று கூறுவதைவிட, கலைஞர் மாவட்டம் என்று கூறலாம். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த மாவட்டம் இந்த திருவாரூர் மாவட்டம்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

---

## முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

# எந்த மாநிலத்திலும் இல்லாத அற்புதமான திட்டம்!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பெருமிதம்!

சென்னை, ஆக. 28 -

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அற்புதமான திட்டம் காலை உணவுதிட்டம்எனவைகோ பெருமிதத்துடன் கூறினார். அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ காலனியில் உள்ள சென்னை மாநகராட்சி, நடுநிலை பள்ளியில் காலை உணவு திட்டத்தை ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். பின்னர், அவர் மாணவ, மாணவியர்களுடன் ஒன்றாக அமர்ந்து காலை சிற்றுண்டி சாப்பிட்டார். அவருடன் மாமன்ற உறுப்பினர் அதியமான் உடனிருந்தார்.



பின்னர், வைகோ அளித்த பேட்டி:

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அற்புதமான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்துள்ளார். ஏழை எளிய குடும்பத்தின் பிள்ளைகள் சரியான சாப்பாடு இல்லாமல் காலையிலேயே பட்டினியாக பள்ளிக்கு வந்து மயங்கி விழுந்த மாணவர்களை கண்ட முதலமைச்சர் அவர்களுக்காக காலை உணவு திட்டத்தை கொண்டு வந்துள்ளார். மதம், ஜாதி, கட்சி அனைத்தையும் கடந்து அத்தனை பிள்ளைகளுக்கும் உணவு வழங்க வேண்டும் என்று மனிதாபிமானத்தோடு இந்த திட்டத்தை கொண்டு வந்துள்ளார்.

செப்டம்பர் 15ம் தேதி நடைபெற உள்ள மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. நீட் தேர்வை ரத்து செய்ய கையெழுத்து இயக்கம் நடத்தி ஜனாதிபதியிடம் வழங்கி உள்ளோம். ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாட்டிற்கு கேடு செய்யும் வகையில் அகந்தையுடன் பேசி வருகிறார். எனவே ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

---



தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையால், ‘தமிழ்த்தென்றல் ‘ திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களின் 140 ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டத்தில் உள்ள அவரது பிறந்த ஊரான துண்டலம் கிராமத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் தமிழறிஞர்கள் பங்கேற்றனர்.

---

# பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு ஆபத்தானது!

### இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் அறிக்கை!

சென்னை, ஆக,28-

பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இரு முறை பொதுத் தேர்வு ஆபத்தானது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருத்து தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கை 2020 வழக்கொழிந்து போக வேண்டிய வருணாசிரம, சனாதன கருத்தியலின் நவீன வடிவமைப்பு என்பதால் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதனை நிறுத்தி வைத்து, அது தொடர்பான வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இப்போது அந்த வல்லுநர் குழு நீண்ட சில நூறு பக்கங்கள் கொண்ட அறிக்கையை பரிந்துரைகளுடன் வெளியிட்டுள்ளது. இதில் பள்ளிக் கல்வி நிலையில் ஆண்டுக்கு இரு பொதுத் தேர்வு என்ற புதிய தேர்வு முறை அறிவிக்கப்பட்டுள்ளது. இரு முறை தேர்வில் எந்தத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளதை மாணவர்கள் அடுத்த நிலைக்கு செல்ல பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. இதில் மாணவர்களுக்கு



வாய்ப்பு வழங்குவதாக தெரிவித் திருந்தாலும், உண்மையில் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின பழங்குடி மாணவர்களை வடிகட்டி வெளியேற்றும் நோக்கம் கொண்டதாகும். அண்மையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா “பிற மொழிகளை (மாநில மொழி தமிழ் நாட்டில் தமிழ்) தாய் மொழியாக கொண்டவர்கள் இந்தி மொழியை எதிர்ப்பின்றி ஏற்க வேண்டும் என்று அகங்காரத்துடன் பேசிய பேச்சுக்கு செயல் வடிவம் தரும் முயற்சியாகும். அரசின் வஞ்சகத் திட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆண்டுக்கு இரு முறை பொதுத் தேர்வு அறிவிப்பை திருப்பப் பெற வேண்டும் என வலியுறுத்துகிறது. இவ்வாறு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறந்த முறையில் சமூக தொண்டாற்றி வரும் அரசுத் துறையைச் சேர்ந்த 8 பணியாளர்கள் மற்றும் சிறந்த முறையில் சமூக தொண்டாற்றி வரும் 4 தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோரை பாராட்டி, நினைவுப் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முழுவதும் 31 ஆயிரம் பள்ளிகளில், சுமார் 17 இலட்சம் மாணவச் செல்வங்களின் பசியைப் போக்கும் விதமாக விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி இந்தியாவிற்கே வழிகாட்டியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு மாணவச் செல்வங்களின் சார்பாகவும், பெற்றோர்களின் சார்பாகவும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் - சிறந்த முறையில்

# சமூகத் தொண்டாற்றும் அரசுத்துறை பணியாளர்கள்- தொண்டு நிறுவனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நினைவுப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்!

நாகை, ஆக. 28 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறந்த முறையில் சமூகத் தொண்டாற்றி வரும் அரசுத் துறையைச் சேர்ந்த 8 பணியாளர்கள் மற்றும் சிறந்த முறையில் சமூகத் தொண்டாற்றி வரும் 4 தொண்டு நிறுவனங்களின் நிர்வா கிகள் ஆகியோரைப் பாராட்டி, நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

**சிறந்த சமூக சேவையாற்றிய அரசுத் துறை பணியாளர்கள்**

நாகப்பட்டினம் நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வரும் ஜீ. ஜெயராமன், கடந்த 15 ஆண்டுகளாக நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட 6 வார்டுகளில் கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்து கொசு மருந்து தெளிக்கும் பணியை சிறப்பாக மேற்கொண்டு பொதுமக்களிடம் பாராட்டுப் பெற்றுள்ளார்.

ஏனங்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை செவிலியராகப் பணிபுரிந்து வரும் திருமதி பி. காந்திமதி, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக பிரசவங்களை கையாண்டு, தாய் மற்றும் சிசு இறப்பின்றி மகப்பேறு பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்.

வேதாரண்யம், ஆறுகாட்டுத்துறை குழந்தைகள் மையத்தில் குழந்தை கள் மைய உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி ஆர். முருகேஸ்வரி, குழந்தைகளின் வீடுகளுக்கே சென்று குழந்தைகளை மையத்திற்கு அழைத்து வருவதோடு, அங்குள்ள 30 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவுகளை சரியான நேரத்தில் அளித்து தனி கவனம் செலுத்தி பெற்றோர்களின் பாராட்டுகளைப் பெற்று வருகிறார்.

தெத்தி, நிஜாம் காலனி அங்கன்வாடி பணியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி எஸ். சம்ஸத்பேகம், குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை கற்றுத் தருவதோடு, சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மையத்தைப் பராமரித்து, அங்குள்ள 15 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவுகளை சரியான நேரத்தில் அளித்து தனி கவனம் செலுத்தி பெற்றோர்களின் பாராட்டுகளை பெற்று வருகிறார்.

வேதாரண்யம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மண்டல அலுவலக மீன்வள மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வரும் எஸ்.சி.விக்னேஷ்வர், கடந்த 31.1.2023 அன்று படகு கவிழ்ந்து கடலில் தத்தளித்த புஷ்பவனம் மற்றும் நாலுவேதபதி கிராமங்களைச் சேர்ந்த 3 மீனவர்களை படகில் சென்று காப்பாற்றியது, கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் காயமடையும் போது அவர்களை உரிய நேரத்தில் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை அளிப்பது போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்.

நாகப்பட்டினம் வட்டம், புத்தகரம் கிராமத்தின் கிராம உதவியாளராக பணிபுரிந்து வரும் எம். சேகர், விடுப்பு எடுக்காமல் அனைத்துப் பணி நாட்களிலும் சிறந்த முறையில் பணியாற்றி அக்கிராம மக்கள் மற்றும் உயரதிகாரிகளின் நற்பெயரைப் பெற்றுள்ளார்.

கீழவேளூர் காவல் நிலைய முதல் நிலை காவலராக பணிபுரிந்து வரும் விக்னேஷ், கீழ்வேளூர் பகுதியில் உண்டியல் திருடர்கள் பற்றிய இரகசியத் தகவல்களை அளித்து அவர்களை கைது செய்வதற்கு உதவியது, எரிசாராயம் கடத்தியவர்களை துரத்திப் பிடித்தது, தனிப்பிரிவு தொடர்பான தகவல்களை உடனுக்குடன் காவல்துறை உயரதிகாரிகளுக்கு அளித்து திருட்டுகள் மற்றும் மோதல் சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பது போன்ற பல்வேறு பணிகளை சிறப்புடன் மேற்கொண்டு வருகிறார்.

தலைஞாயிறு தீயணைப்பு நிலைய தீயணைப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து வரும் எம். அய்யாதுரை, நீர்முளை அரசு ஆரம்ப சுகாதார நிலைய கழிவறை கோப்பைக்குள் சிக்கிக் கொண்ட தாஷிகா என்ற 8 வயது சிறுமியை பத்திரமாக மீட்டு அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய அரசுத் துறையைச் சேர்ந்த ஜீ. ஜெயராமன், திருமதி பி. காந்திமதி, திருமதி ஆர். முருகேஸ்வரி, திருமதி எஸ். சம்ஸத்பேகம், எஸ்.சி. விக்னேஷ்வர், எம். சேகர், விக்னேஷ், எம். அய்யாதுரை ஆகியோரது சேவைகளைப் பாராட்டி முதலமைச்சர் அவர் கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

சிறந்த சமூக சேவையாற்றிய தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் சி. இராஜேந்திரன், கடந்த 10 ஆண்டுகளாக ஆதரவின்றி உயிரிழந்தவர்களின் உடல்கள், முதியோர் இல்லங்களில் இறப்பவர்கள், வசதி இல்லாதவர்கள் மற்றும் மருத்துவமனை களில் அடையாளம் தெரியாத பிணக்கூறு செய்யப்பட்ட உடல்கள் ஆகியவற்றை உரிய மரியாதையுடன் தனது சொந்த செலவில் ஈமச்சடங்குகள் செய்து நல்லடக்கம் செய்து வருகிறார்.

வள்ளலார் தருமச்சாலையைச் சேர்ந்த சமூக ஆர்வலரும், வேதாரண்யம் நகராட்சி குழந்தைகள் நல பாதுகாப்பு உறுப்பினருமான மு.வெற்றியழகன், மாற்றுத்திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டோர் மற்றும் முதியவர்களுக்கு தினசரி மூலிகைக் கஞ்சி வழங்குவது, இடம் பெயர்ந்து வரும் மனநலம் குன்றியவர்களுக்கு உணவு, உடை மற்றும் மருந்து வழங்குவது, வள்ளலார் எக்ஸ்னோரா மூலம் மரக்கன்றுகள் வழங்குவது, குழந்தைகள் மற்றும் பெண்கள் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரக்கன்றுகள் நடுதல், பாரம்பரிய உணவு திருவிழா, பேரிடர் விழிப்புணர்வு முகாம், இயற்கை விவசாய விழிப்புணர்வு, டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு, பனை விதைகள் விதைப்பு முகாம் போன்ற பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

வேதாரண்யம், ஈகா அறக்கட்டளையின் நிர்வாகியும் சமூக ஆர்வலருமான மோகன இராஜசேகரன், தோப்புத்துறையில் ஈகா அறக்கட்டளையை தொடங்கி, தாய், தந்தை இல்லாத குழந்தைகளின் கல்விக்கு உதவி செய்வது, சாலையோரத்தில் வசிக்கும் ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டு சாலையில் சுற்றி திரிபவர்களுக்கு மூன்று வேளை உணவு வழங்குவது, வேதாரண்யம் மூன்றாம் தெருவில் தைத்தடி முதியோர் இல்லத்தை தொடங்கி ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, உறைவிட வசதி ஏற்படுத்தி தருவது, பொதுமக்களிடம் நிதி திரட்டி, பொருளாதார பின்புலம் இல்லாத நலிந்த மக்களுக்கு மருத்துவ உதவி மற்றும் குழந்தைகளுக்கு உயர்தர அறுவை சிகிச்சைக்கான உதவிகளை செய்வது போன்ற பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

வேளாங்கண்ணி, உதவிக் கரங்கள் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்தின் நிர்வாகி ஆண்டனி பிரங்ளின் ஜெயராஜ், தினமும் 100 நபர்களுக்கு ஸ்பான்ஸர்ஸ் மூலமாக மதிய உணவு வழங்குவது, உதவி கரங்கள் ஆம்புலன்ஸ் சேவை, வேளாங்கண்ணி கடற்கரையில் உதவி கரங்கள் கடல் மீட்பு குழுவினர் மூலம் கடலில் மூழ்கி தத்தளிக்கும் நபர்களை மீட்க உதவி செய்வது போன்ற பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறந்த முறையில் சமூக தொண்டாற்றி வரும் சி. இராஜேந்திரன், மு. வெற்றியழகன், மோகன இராஜசேகரன், ஆண்டனி பிரங்ளின் ஜெயராஜ் ஆகியோரது சேவைகளைப் பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்சி மாவட்டத்தில் ரோந்துப்பணியின் போது சாலை ளளவிபத்து: உயிரிழந்த

# தலைமைக் காவலரின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**நாகை, ஆக. 28 -**

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரோந்து பணியின் போது ஏற்பட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அவ்வறிவிப்பு வருமாறு:-

திருச்சி மாநகர், அரிய மங்கலம் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த ஸ்ரீதர் (வயது 45) கடந்த 30.7.2023 அன்று அரிஸ்டோ இரயில்வே மேம்பாலத்தில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த கார் ஒன்று மோதியதில் காயமுற்று அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவர் அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் தலைமைக் காவலர் ஸ்ரீதர் உயிரிழந்திருப்பது காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

தலைமைக் காவலர் ஸ்ரீதர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக் கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### குஜராத் மாநில மின் வாரியத்திற்கு நிலக்கரி வழங்கியதில்

# அதானி நிறுவனம் ரூ.3,900 கோடி ஊழல்!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஆக.28-*

*குஜராத் மாநில மின்சார வாரியத்துக்கு நிலக்கரி அளித்ததில் கவுதம் அதானி நிறுவனம் சுமார் 3 ஆயிரத்து 900 கோடி ரூபாய் ஊழல் செய்திருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.*

*டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்த காங்கிரஸ் கட்சியின் குஜராத் மாநில தலைவர் ஸ்ரீசக்தி சிங் கோஹில் ((Shri Shaktisinh Gohil)), ஒன்றிய மோடி அரசு பெருமுதலாளிகளுக்கு ஆதரவான அரசு என்றும், பெருமுதலாளிகளால், பெருமுதலாளிகளுக்காக, பெருமுதலாளிகள் நடத்தும் அரசு என்றும் விமர்சித்தார்.*

*பிரதமரால் அதிகம் ஆதரிக்கப்படும் அதானி நிறுவனம் பங்குச்சந்தையில் தில்லு முல்லு செய்து முறைகேடு செய்திருப்பதாக ஹிண்டன்பர்க் நிறுவனம் அறிக்கையில் தெரிவித்திருந்ததை அடுத்து, பெருநிறுவன நிர்வாக அமைப்பு, பணமோசடி, பங்குசந்தையில் வர்த்தகம் உள்ளிட்டவை குறித்து விரிவாக விசாரணை நடத்த வேண்டுமென காங்கிரஸ் தொடர்ந்து வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்டார்.*

*குஜராத் மாநில மின்சார வாரியமானது, அதானி பவர் நிறுவனத்திடம் இருந்து 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் வரை நிலக்கரியை 13,802 கோடி ரூபாய் கொடுத்து வாங்கியிருப்பதாகவும், கடந்த மே மாதம் கூடுதலாக 3,900 கோடி ரூபாய் விலை கொடுத்து வாங்கியிருப்பதை புரிந்து கொண்டு, அந்த தொகையை திருப்பி அளிக்க வேண்டுமென அதானி, பவர் நிறுவனத்துக்கு கடிதம் அனுப்பியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.*

*இந்தோனேசியாவில் இருந்து நிலக்கரியை சந்தை விலையை விட கூடுதலாக அதானி நிறுவனம் வாங்கியுள்ளதாகவும், இதுதொடர்பான ரசீதுகளை குஜராத் மாநில மின்சார வாரியம் கேட்டும் இதுவரை அதானி நிறுவனம் அளிக்கவில்லை என்றும் கோஹில் குற்றம் சாட்டினார்.*

*அரசிடம் இருக்கும் பொதுமக்களின் பணத்தை மிகப்பெரிய அளவில் அதானி நிறுவனம் ஊழல் செய்திருப்பது குறித்து அமலாக்கத்துறையோ அல்லது, சி.பி.ஐ.யோ அல்லது தீவிர முறைகேடு விசாரணை ஆணையமோ ஏன் விசாரணை நடத்தவில்லை என்றும் கோஹில் கேள்வியெழுப்பினார்.*

# டெல்டா மாவட்டங்களின் கள ஆய்வில் முதல்வர் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

மட்டும் நேரடியாக கேட்டுப் பேசி, ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளமுடியும். ஆனால், அதையும் தாண்டி செயலாற்றவேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, இது வரை வேலூர், சேலம், மதுரை மற்றும் விழுப்புரம் ஆகிய 4 இடங்களில் மொத்தம் 17 மாவட்ட அதிகாரிகளோடு நேரடி ஆலோசனை நடத்தி முடித்திரு க்கின்றேன். அந்த வரிசையில், இன்றைக்கு தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட அதிகாரிகளாகிய உங்களைச் சந்திக்கின்றேன்.

**எதிர்பார்த்த மாற்றம் நிறைவேறத் தொடங்கிவிட்டது!**

முதன்முதலாக, வேலூருக்கு சென்றபோது நடத்திய கள ஆய்வுக்கும் - அடுத்தடுத்த மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்வுக்கும் மிகப்பெரிய வித்தியாசத்தை நான் பார்க்கிறேன். வேலூரில் நானோ, அமைச்சர்களோ, துறைச் செயலாளர்களோ என்ன மாதிரியான கேள்விகளை முன்வைத்தோம் என்று தெரிந்து கொண்டு, மற்ற மாவட்டத்தின் அதிகாரிகள் அதை தங்களுடைய மாவட்டத்தில் முடித்து வைத்திருக்கிறார்கள். இதுதான் நான் எதிர்பார்க்கின்ற மாற்றம். அந்த மாற்றம், இரண்டாவது கூட்டத்திலேயே நிறைவேறத் தொடங்கி விட்டது.

நம்முடைய மாவட்டத்திற்கு முதலமைச்சர் வந்தால், இதையெல்லாம் கேட்பார் என்று நினைத்து, ஓரளவுக்கு செயல்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதை இந்தத் திட்டத்தால் நடக்கின்ற நல் விளைவாகதான் நான் பார்க்கின்றேன்.

நான்கு மாவட்ட அலுவலர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது,

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்,
- கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்,
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்,
- முதலமைச்சர் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம்
- மக்களைத் தேடி மருத்துவம்

- போன்ற திட்டங்கள் இந்த மாவட்டங்களில் சிறப்பான முறையில், எந்த ஒரு தொய்வும் இல்லாமல் செயல்படுத்தப்படவேண்டும்.

100 நாள் வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வேலை வழங்கக் கூடிய சராசரி நாட்களை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த மாவட்டங்களில் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டு, இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்ற பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுங்கள்.

- வேளாண் சாகுபடி பரப்பு குறைந்து கொண்டு வருகின்ற வட்டாரங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி வேளாண் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உடனடி முயற்சிகள் தேவை.
- காய்கறிகள் மற்றும் கனிகள் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உரிய நடவடிக்கை எடுங்கள்.
- தென்னை மரங்கள் அதிகம் நிறைந்துள்ள இந்த மாவட்டங்களில், சமீப காலமாக, இயற்கைச் சீற்றத்தாலும், உரிய வருமானம் இல்லாததாலும், சில வட்டாரங்களில் தென்னை மரங்களின் பரப்பு முந்தைய காலக்கட்டங்களை விடவும் வெகுவாகக் குறைந்து கொண்டு வருகிறது என்று நான் உணர்கிறேன், அதற்காகக் கவலைப்படுகிறேன். அதனால், தென்னை மரங்களின் பரப்பை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள உடனடியாகச் செய்யுங்கள்.
- உற்பத்தி அதிகரித்தால் மட்டும் போதாது. விளை பொருள்களுக்கான உரிய சந்தை விலையும் உழவர்களுக்குக் கிடைக்கவேண்டும். உழவர்கள் தங்களுடைய விளைபொருட்கள் லாபகரமான முறையில் விற்பனை செய்வதற்கு வேண்டிய eNAM (இநாம்) உள்ளிட்ட சந்தை வசதிகளைப் பெருக்க வேண்டும்.
- அதே நேரத்தில், இந்த மாவட்டங்களின் வளர்ச்சி என்பது வேளாண்மையை மட்டும் சார்ந்து இல்லாமல், தொழில் சார்ந்தும் இருக்க வேண்டும்.
- மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள், இதை உணர்ந்து மாவட்டம் முழுவதற்குமான அரசின் பொதுவான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். மேலும், உங்கள் மாவட்டத்திற்கு உரிய தனிப்பட்ட தேவைகளை கவனத்தில் வைத்து, அதனடிப்படையில், அரசுக்குத் திட்டங்களை எடுத்துச் சொல்லி, அதற்கான தகுந்த முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்.
- பட்டா மாறுதலுக்காக வந்த விண்ணப்பங்களில் நிலுவையில் இருப்பதில் முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக பட்டா வழங்கவேண்டும்.
- பட்டாவில் திருத்தம் கோரும் விண்ணப்பங்களை உடனடியாக செய்து தரவேண்டும்.
- சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தால், குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக சான்றிதழ்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தை மார்ச் 16ஆம் தேதி முதல் அமல்படுத்தி வருகிறோம். ஆனால், இந்த மாவட்டங்களில், ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் அதிகமாக இருப்பதாக புள்ளிவிவரம் சொல்கிறது. இந்தத் திட்டத்தை கருணை உள்ளத்தோடு நீங்கள் கவனிக்கவேண்டும்.

சில துறைசார்ந்து கவனிக்க வேண்டியவிஷயங்களைநினைவூட்டுகிறேன்.

- நகர்ப்புற சாலைப் பணிகளில் திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் முன்னேற்றம் இல்லை என்று ரிப்போர்ட் சொல்கிறது.
- பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், பத்தாம் வகுப்பு தேர்ச்சியில் மயிலாடுதுறை மாவட்டம் கடைசியாக இருக்கிறது. இது கவலைக்குரியது. இதை அடுத்த ஆண்டுக்குள் மாற்றியாகவேண்டும்.

- இவை இரண்டிலும் மாவட்ட ஆட்சியர்கள் அதிக அக்கறை காட்டவேண்டும்.

**சுயஉதவிக்குழுக்களுக்கு கடனுதவி: அதிக கவனம் தேவை!**

பொருளாதார வளர்ச்சிக்கு, அரசுத் திட்டங்கள் மட்டுமில்லாமல், வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்ற பல்வேறு கடனுதவிகள் எவ்வளவு அவசியம் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அத்தகைய கடனுதவிகள் வழங்குவதில், குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடனுதவி வழங்குவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னால், நிலுவையில் இருக்கின்ற சாலைப் பணிகளை முடித்து, மக்களுடைய இன்னல்களைப் போக்கவேண்டும். எனவே, ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையில், விரைந்து செயல்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலக்கட்டத்திற்குள் எல்லா பணிகளையும் முடிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்துக்கு உரிய தயாரிப்புடன் வந்து, இறுதி வரை ஆர்வத்தோடு பங்கேற்று, உங்கள் பகுதியில் உள்ள பிரச்சினைகளை தெளிவாகச் சொல்லி, பல்வேறு கருத்துகளை இங்கே பகிர்ந்து கொண்ட அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

**சிறப்பான செயல்பாட்டுக்கு அரசு துணை நிற்கும்!**

தொடர்ந்து மக்களிடம் சென்று, அவர்களோடு இருந்து அவர்களின் பிரச்சினைகளை சரி செய்து, தேவைகளை நிறைவேற்றி, நமது அரசுக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் உரிய மன நிறைவு கிடைக்கும் வகையில் செயல்படுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் சிறப்பான செயல்பாட்டுக்கு இந்த அரசு எப்போதும் துணை நிற்கும்.

**நல்லாட்சியின் இலக்கணம்!**

அதிகாரிகளும் அமைச்சர்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதும் மாவட்ட அலுவலகங்களும் தலைமைச் செயலகமும் ஒருங்கிணைந்து செயல்படுவதும்தான் நல்லாட்சியின் இலக்கணம்.

நாம் அனைவரும் "மக்கள் சேவகர்கள்" என்பதை மனதில் வைத்து செயலாற்றுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, அரசு துறைச் செயலாளர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!... 2ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தச் செயல்வீரர்கள் கூட்டத்தை அண்ணன் கலைவாணன் அவர்கள் சேலம் மாநாட்டினுடைய முன்னோட்டம் போல சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார். எந்த நிகழ்ச்சியையும் பிரமாண்டமாக வும் அதே நேரத்தில் ஒழுங்குடனும் நேர்த்தியாவும் செய்பவர்தான் நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கலைவாணன் அவர்கள்.

தி.மு.கழகம் மீது வைக்கப்படுகின்ற ஒரே குற்றச்சாட்டு குடும்பக் கட்சி என்பதுதான். ஆனால். நம்முடைய அண்ணன் கலைவாணன் அவர்களுடைய குடும்பம் கழகத்திற்காக எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் உழைத்த குடும்பம். மறைந்த அண்ணன் பூண்டி செல்வம் அவர்களுடைய இடத்தை நிரப்பியவர்தான் நம்முடைய அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்கள்.

அண்ணன் அவர்கள் இளைஞர் அணிக்கு சுதந்திரம் கொடுத்து பணியாற்ற வைப்பார். அந்த சுதந்திரத்திற்கு உதவ எடுத்தான் நம்முடைய மாநில துணை செயலாளர் சகோதரர் இளையராஜா அவர்கள். சொல்லப்போனால். இளையராஜா அவர்கள் எனக்கே சீனியர். உண்மையைச் சொல்ல வேண்டும் அல்லவா?

இன்றைக்கு இளையராஜா அவர்கள் மாவட்ட அமைப்பாளராக இருந்து. இன்று மாநிலத் துணைச் செயலாளர் ஆகியிருக்கிறார் என்றால், அதற்கு அவருடைய உழைப்பு. அந்த உழைப்புக்கு அண்ணன் கலைவாணன் அவர்கள் கொடுத்த அந்தச் சுதந்திரம் தான் காரணம்.

அதேபோல் தற்போது திருவாரூர் மாவட்ட அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சகோதரர் பனங்குடி ஏ.எஸ்.குமார் அவர்கள் ஏற்கனவே ஒன்றிய அமைப்பாளராக இருந்து தன்னுடைய உழைப்பின் மூலம் இந்தப் பொறுப்புக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். இங்கே ஒரு விஷயத்தை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். மாவட்ட அமைப்பாளர்கள் நேர்காணல் நடந்தது. தமிழ்நாடு முழுவதும் நானும் மாநில துணைச் செயலாளர்கள் அத்தனை பேரும் பயணம் செய்து ஒவ்வொரு மாவட்டமாக நேர்காணல் நடத்தினோம்.

**இளைஞர் அணிக்கு சுதந்திரம் கொடுக்கும் கலைவாணன்!**

மாவட்ட அமைப்பாளர் நியமனத்தின் போது நம்முடைய சகோதரர் குமார் அவர்களுடைய பணிகளைக் கண்டு. நாங்களே அவரை மாவட்ட அமைப்பாளர் ஆக்கலாம் என்று முடிவு செய்து வைத்திருந்தோம். ஆனாலும் எல்லா மாவட்டச் செயலாளர்களிடமும் பரிந்துரை கடிதம் வாங்குவதைப் போல் அண்ணன் அவர்களிடமும் வாங்கியிருந்தோம்.

நாங்கள் நினைத்திருந்த அதே குமார் அவர்களுடைய பெயரைத்தான் அண்ணனும் பரிந்துரை செய்திருந்தார். அந்த அளவுக்கு இளைஞர் அணிக்கு சுதந்திரம் கொடுத்து, நம்மோடு பயணிப்பவர்தான் நம்முடைய அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்கள். அவருக்கு இந்த நேரத்தில் மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தில் உழைத்தால் முன்னேற லாம் என்பதற்கு இந்த இளைஞர் அணி ஒரு மிகச் சிறந்த சாட்சி. `உழைப்பு... உழைப்பு... உழைப்பு. உழைப்பு என்றால் ஸ்டாலின், ஸ்டாலின் என்றால் உழைப்பு' என்று நம்முடைய முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களாலேயே பாராட்டப்பட்டவர் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள். அத்தகைய நம்முடைய தலைவர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இளைஞர் அணியின் மூலம் உழைப்பால் உயர்ந்தவர்கள் ஏராளம். அதற்கு மிகச் சிறந்த உதாரணம் நம்முடைய தலைவர் அவர்கள். அவருடைய உழைப்பின் மூலம் இன்று இந்த மாநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பில் அமர்ந்திருக்கின்றார்.

இந்த அணியில் உள்ள ஒன்பது மாநிலத் துணைச் செயலாளர்களில் எட்டு பேர் மாவட்ட அமைப்பாளர்களாவும், ஒருவர் மாவட்டத் துணை அமைப்பாளராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்கள். அதனால்தான் தலைவர், அவர்களுக்கு அந்த அங்கீகாரத்தைக் கொடுத்திருக்கிறார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற மாவட்ட, மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர் நேர்காணலில், தமிழ்நாடு முழுவதும் 658 நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 658 நிர்வாகிகளில் 452 பேர் ஏற்கனவே இளைஞர் அணியில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளராகக் கட்சிப் பணியாற்றியவர்கள். கழகப் பணியாற்றியவர்கள்.

**25 லட்சம் புதிய உறுப்பினர்கள்!**

இன்றைக்கு இளைஞர் அணியின் சார்பாக ஏராளமான பணிகளை நாம் செய்து வருகின்றோம். 2019ஆம் ஆண்டு நான் மாநிலச் செயலாளராகத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட பொழுது தலைவர் அவர்கள் என்னிடத்தில் ஒரு டார்கெட் கொடுத்தார். ஒவ்வொரு தொகுதிக்கும் குறைந்தது பத்தாயிரம் பேரை இளைஞர் அணியில் சேர்க்க வேண்டும் என்று. அப்படிக் கிட்டத்தட்ட 25 லட்சம் புதிய உறுப்பினர்களை நாம் சேர்த்தோம். அந்த இலக்கை திருவாரூர் மாவட்டம் சரியாக எட்டியது. இப்போதுகூட `இல்லந்தோறும் இளைஞர் அணி'யிலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, உறுப்பினர்களைச் சேர்த்த மாவட்டம் இந்த திருவாரூர் மாவட்டம். தொகுதிதோறும் இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம் நம்முடைய தலைவர் அவர்கள் கழகத்துடைய இதயம் பொதுக்குழுவிலே இளைஞர் அணியைப் பாராட்டினார்.

சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணியின் மாநில மாநாட்டை வெற்றி பெற வைக்கவேண்டும் என்பதுதான் இந்தக் கூட்டத்தின் ஒரே நோக்கம். நீங்கள் அனைவரும் இந்த மாநாட்டுக்கு வந்து சிறப்பிக்கவேண்டும். சமீபத்தில் வேறு ஒரு மாநாடு நடந்தது. அதாவது ஒரு மாநாடு எப்படி நடத்தக்கூடாது என்பதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணமாக அந்த மாநாடு நடந்தது. தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் புரியும். அந்த மாநாட்டை எப்படி நடத்தினார்கள். அதில் ஏதாவது கொள்கை பேசினார்களா? ஒன்றிய அரசை எதிர்த்து ஏதாவது ஒரு தீர்மானம் போட்டார்களா? இத்தனைக்கும் அதே நாளில் நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி நடைபெற்ற உண்ணாவிரதப் அறப்போராட்டத்தில் நான் ஒரு சவால் விட்டேன். நீட் தேர்வில் வெற்றி பெற்றும் கல்லூரியில் சேர இடம் கிடைக்காமல் ஒரு மாணவன் இறந்துட்டான். அந்த மாணவனுடைய தந்தையும் இறந்துவிட்டார்.

**'நீட்' தேர்வை ரத்து செய்த கலைஞர்!**

நுழைவுத்தேர்வு கொண்டு வந்தபோது. கலைஞர்தான் நுழைவுத் தேர்வை ரத்து பண்ணினார். கிராமங்களில் இருந்து ஏழை எளிய மாணவர்கள் மருத்துவர் ஆகணும் என்றால் பன்னிரண்டாம் வகுப்பில் வாங்குகின்ற மதிப்பெண்ணே போதும் என்று கலைஞர் அவர்கள் நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். இன்னும் சொல்கிறேன், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்த வரைக்கும் தமிழ்நாட்டுக்குள்ளே நீட் தேர்வு வரவில்லை. மற்ற மாநிலங்களில் எல்லாம் வந்துடுச்சு. ஆனால், ஜெயலலிதா அம்மையார் அவர்கள் அதை வரவிடலை. எந்தக் காலத்தில் நீட் தேர்வு தமிழ்நாட்டுக்குள் வந்தது. அந்த அம்மையார் இறந்த பிறகு. இந்த அடிமைக் கூட்டம் இந்த நீட் தேர்வைக் கொண்டு வந்து, இதுவரைக்கும் 21 உயிர்கள் பறிபோய்விட்டன. இதைத் தற்கொலை என்று சொல்கிறார்கள். இது தற்கொலை கிடையாது. கொலை. ஒன்றிய பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் சேர்ந்து செய்திருக்கக்கூடிய 21 கொலைகள். அரியலூர் அனிதாவில் ஆரம்பித்து சென்னை குரோம் பேட்டை ஜெகதீஸ் என்ற மாணவன் வரை 21 கொலைகள்.

ஆம், நம்ம தேர்தல் பிரச்சாரத்தின் போது நான் சொன்னேன். நீட் தேர்வை ரத்து செய்வதற்கான முழு முயற்சியில் ஈடுபடுவோம் என்று சொன்னோம். ரத்துச் செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தோம். அதற்காக நாம் உண்மையாக உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதுவரைக்கும் என்னவெல்லாம் பண்ணினோம். ஆட்சி அமைந்தது. ஏற்ற ஒரே மாதத்தில் தலைவர் அவர்கள் நீதியரசர் ஏ. கே.ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்தார். அவங்க மாநிலம் முழுவதும் சென்று சுற்றுப்பயணம் செய்து மாணவர்கள், பெற்றோர், மருத்துவர்கள், கல்வியாளர்களைச் சந்தித்தார்கள்.

நீட் தேர்வு வேண்டுமா வேண்டாமா என அவர்களிடத்தில் விவாதிக்கப்பட்டது. அதன்பிறகு, சட்டமன்றத்திலே இரண்டு முறை மசோதா நிறைவேற்றப்பட்டு அனுப்பினோம். ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் அதை வாங்கி வைத்துக்கொண்டு. திருப்பி அனுப்பி விட்டார்.

**தைரியமில்லாத அ.தி.மு.க.!**

மீண்டும் அடுத்த நாளே தலைவர் அவர்கள் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி திலே 234 எம்.எல்.ஏக்களில், அதிமுக உட்பட நீட் தேர்வை ரத்து செய்யவேண்டுமென்று அந்த 230 பேர் மசோதாவிற்கு ஒப்புதல் அளித்தார்கள். அந்த ஓட்டு போடாத, ஆதரிக்காத அந்த நாலு பேர் யாரென உங்களுக்கே தெரியும்.

அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் நான் சொன்னேன். ' மதுரையில் ஒரு மாநாடு நடந்துக்கொண்டிருக்கிறது. மாநாடு என்றால். தீர்மானங்களெல்லாம் போடுவீங்க. 32 தீர்மானங்கள் போட்டு இருக்காங்க. அதில் ஒரு தீர்மானமானத்தில் லாவது ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ஒரு கோரிக்கை வைப்பாங்க. நீங்கள் கட்டளையிட மாட்டீங்கள். உங்களுக்கு அவ்வளவு தைரியமெல்லாம் கிடையாது.

உங்களுடன்தானே கூட்டணியில் இருக்காங்க. உங்களுடைய வாலை பிடித்துப்பதுதானே சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அ.தி.மு.க.வோடு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி வைக்க வேண்டும் என்றால், தமிழ்நாட்டில் நீட் தேர்வு ரத்துச் செய்ய முழு மனதுடன் ஒரே ஒரு கோரிக்கை வையுங்கள்" என்றேன்.

ஆனால் அந்த மாநாட்டில் நடந்தது என்ன? தயிர் சாதம் நல்லாருக்கா. புளி சாதம் நல்லா இருக்கா என்று விவாதிக்காத குறையாக ஆடல் பாடல் கலைநிகழ்ச்சி நடத்தியிருக்கின்றனர். இன்று அ.தி.மு.க. மாநாட்டுக்குப் போய் விட்டு வந்த ஒருவர். 'என் மனைவியை மாநாட்டில் காணவில்லை' என்று போலீஸ்ல புகார் கொடுத்து இருக்கிறார். நான் ஏதோ வேடிக்கைக்காகச் சொல்லலை. அப்படி ஒரு மாநாட்டை. ஒரு கேளிக்கூத்தை நடத்தியிருக்காங்க.

இந்த நேரத்திலே உங்களுக்கு நான் நன்றி சொல்கிறேன். காரில் வரும்போது நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளரிடத்திலே. `என்ன அண்ணா. திருவாரூர் மாவட்டத்திலே உண்ணாவிரதப் போராட்டம் எப்படி நடந்தது' என்று கேட்டுக்கிட்டு இருந்தேன். கிட்டத்தட்ட 3.000 இளைஞர்கள். மாணவர்கள். கட்சிக்காரர்கள் கலந்துக்கிட்டாங்க. உணர்வுப் பூர்வமாகக் கலந்துகொண்டாங்க. காலை 9 மணிக்கு வந்து உட்கார்ந்தவங்க மாலை 5 மணிக்குத் தான் எழுந்து போனாங்க' என்றார். புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு, இளைஞர் அணியின் சார்பாக மாணவர் அணி, மருத்துவ அணிக்கு முதல் போராட்டத்தை இவ்வளவு பெரிய ஒரு வெற்றிப்போராட்டமாக மாற்றிக்காட்டிய உங்கள் அத்தனைப்பேருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அத்தனை பேரும் உதயநிதியாக மாற வேண்டும்!**

இது ஒரு முழு வெற்றி என்று நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நம்முடைய எதிர்ப்பை தெரிவிச்சி இருக்கோம். நான் அந்த உண்ணாவிரதப் போராட்டத்திலேயே சொன்னேன். நீட் தேர்வு ரத்தாகும் வரை இளைஞர் அணியினுடைய போராட்டம் கண்டிப்பாகத் தொடரும். அது டெல்லிவரை போனாலும் அதையும் செய்து காட்டுவோம்.

இங்கே நீட் தேர்வை ஒழிக்கிறதுக்கு இந்த ஒரு உதயநிதி பத்தாது. இங்க வந்திருக்கக்கூடிய நீங்க அத்தனை பேரும் உதயநிதியா மாறி போராட்டக் களத்துக்கு வரணும். இது என்னுடைய தனிப்பட்ட விஷயங்களுக்காக நடத்துகின்ற போராட்டம் கிடையாது.

மாணவர்களுடைய கல்வி உரிமைக் காக மக்களுக்காக நடத்துற போராட்டம். எப்படி இந்தி திணிப்பிற்குத் தலைவர் கலைஞர் போராட்டத்தில இறங்கினாரோ, எப்படி எமர்ஜென்சி காலத்துல மிசா காலத்துல நம்முடைய தலைவர் அவர்கள் களத்தில் இறங்கினாரோ, அதே மாதிரி இந்த நீட் தேர்வு ரத்து செய்வதற்காக நடைபெறும் போராட்டத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்குவதற்குத் தயாராக இருக்கணும்.

**மோடி அரசின் ஊழல் முகம்!**

சமீபத்தில் சி.ஏ.ஜி அறிக்கை வெளிவந்தது. அதைப்பற்றி யாரும் பேச மாட்டேங்கிறாங்க. இந்தச் சி.ஐ.ஜி அறிக்கையில் மோடி அரசினுடைய அரசினுடைய ஊழல் முகம் வெளிவந்திருக்கு. உண்மை முகம் ஊழல் முகம் வெளிவந்திருக்கிறது. `ஆயுஷ்மான் பாரத மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்'என்ற இன்சூரன்ஸ் பாலிசி. அதுல இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு இன்சூரன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கு. இறந்து போனவர்களுக்கான இன்ஷூரன்ஸ்.

இறந்து போன 403 பேருக்குச் சிகிச்சை ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்காங்க. ரமணா படத்தில் இறந்து போய் பெட் பாடியை வச்சுக்கிட்டு ட்ரீட்மெண்ட் என்று பில் போடுவதற்காக நேரம் கடத்துவாங்க. அதேபோல் இறந்து போன 403 பேருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ஆயுஷ்மேன் பாரத் திட்டத்தின் கீழ் காப்பீடு வழங்கியிருக்காங்க.

அடுத்து சாலைகள் அமைப்பதற்கான பாரத் மாலா என்று ஒரு திட்டம். ஒரு கிலோமீட்டருக்கு 32 கோடி செலவு ஆச்சு என்று கணக்கு காட்டி இருக்காங்க. ஒரு கிலோமீட்டருக்கு 32 கோடி ரூபாய். அதுல கிட்டத்தட்ட 7 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செஞ்சிருக்காங்க.

டெல்லியில் துவாரகா விரைவு சாலைத் திட்டத்தில் ஒரு கிலோமீட்டர் ரோடு போடுவதற்கு எவ்வளவு தெரியுமா செலவுக் கணக்கு காட்டி இருக்காங்க. ஒரு கிலோமீட்டர் ரோடு போட 250 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறார்கள். இவங்கதான் நமக்கு ஊழல் ஒழிப்புப் பாடம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல கொரோனா காலத்தில் உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். 'பி.எம். கேர்ஸ் பண்ட்' என்று ஒன்று வசூலிக்க ஆரம்பித்தார்கள். நன்கொடை. கொரோனாவில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எல்லாரும் நன்கொடை கொடுங்கள் என்று நாடு முழுவதும் வசூலித்தார்கள்.

இதுவரைக்கும் அந்தப் பி.எம் கேர்ஸ் பண்டுல 32 ஆயிரம் கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கு. ஆனால். அந்த 32 ஆயிரம் கோடி ரூபாயில் இதுவரைக்கும் ஒரு ரூபாய்க்கு கூட கணக்கில் காட்டலை. தகவல் அறியும் சட்டத்தில் கேள்வி கேட்டால். அதைக் கேட்க மக்களுக்கு உரிமை கிடையாது என்று சொல்றாங்க.

இதையெல்லாம் நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். மோடி அவர்கள் எங்கே போய் பேசினாலும் இந்தியாவில் எந்த மாநிலத்திற்குப் போய் பேசினாலும் தி.மு.க பற்றியும், நம்முடைய தலைவர் அவர்களைப் பற்றியும் தான் பேசிவருகிறார்.

**மணிப்பூர் மாநிலம் எரிந்து கொண்டிருக்கிறது!**

மணிப்பூர் என்ற மாநிலம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. ஐந்து மாதங்களாக. அதைப் பத்தி பேச மாட்டேங்கிறாங்க. மணிப்பூரை ஆண்டு கொண்டு இருப்பது பா.ஜ.க. அரசு. பா.ஜ.க. தான் அங்க முதலமைச்சர். கிட்டத்தட்ட 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. நமக்கெல்லாம் இங்க இன்டர்நெட் இருக்குல்ல அங்க எதுவுமே கிடையாது. ஆனாலும் சமீபத்தில் ஒரே ஒரு வீடியோ மட்டும் வந்துருச்சு. அது வந்ததுக்கு அப்பறம்தான் பெரிய எதிர்ப்பு கிளம்புகிறது. பிறகுதான் பாராளுமன்றத்திற்கு மோடி அவர்கள் வந்து பேசினார்.

ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவதற்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்த வேண்டியதாக இருந்தது. அப்படி வந்து இரண்டு மணி நேரம் பேசியதில், ஒரு மணி நேரம் 50 நிமிஷம் தி.மு.க. பத்தியும் கலைஞர் குடும்பம், தி.மு.க அரசு பற்றியும் பேசிவிட்டு வெறும் அஞ்சு நிமிஷம் மட்டுமே மணிப்பூர் பற்றி பேசினார். தி.மு.க ஆட்சியில் கலைஞர் குடும்பம் மட்டும்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்கு. நான் சொல்கிறேன். ஆமாம், கலைஞர் குடும்பம்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்கு. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் கலைஞர் குடும்பம்தான்.

நான் உங்களைக் கேள்வி கேட்கிறேன். இந்த ஒன்பது வருட ஆட்சியில் என்ன செய்து கிழிச்சீங்க? இருக்கிற கருப்புப் பணத்தை எல்லாம் ஒழிச்சுடுவோம்னு சொன்னீங்க. ஞாபகம் இருக்கிறதா, திடீரென ஒரு நாள் நடுராத்திரியில எழுந்து `1,000 ரூபாய் நோட்டும், 500 ரூபாய் நோட்டும் செல்லாது'என்றார். ஏன் என்று கேள்வி கேட்டால், புதிய இந்தியா பிறக்கப் போகுதுன்னார். அந்தப் புதிய இந்தியா எங்க பொறந்துச்சுனு யாராவது பார்த்தீங்களா?

அது மட்டுமல்ல இல்ல கருப்புப் பணத்தை எல்லாம் மீட்டு, ஒவ்வொருத்தருடைய வங்கிக் கணக்கிலும் 15 இலட்சம் ரூபாய் போடுறேன்னு சொன்னார். 15 ரூபாயாவது போட்டீங்களா? 15 பைசா கூடப் போடலை. இருக்குறதையும் புடிங்கிக்கிட்டாங்க.

**அதானி யார்?**

வேலை வாய்ப்பு உருவாக்கி தருவோம் என்றார்கள், அதையும் செய்யல. உங்களால் வாழ்ந்த குடும்பம் யார்? அதானி குடும்பம். இந்த அதானி யாரு? மோடி உடைய மிக மிக நெருங்கிய நண்பர். உலகப் பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந்தார். இந்தியாவில் உள்ள அத்தனை பொதுத் துறையையும் தூக்கி அதானி கையில கொடுத்தாச்சு. அதானி ரயில்வே வந்துருச்சு, அதானி ஏர்போர்ட் வந்துருச்சு, அதானி ரோடு வேஸ் வந்துருச்சு, அதானி போர்ட் வந்துருச்சு, அதானி ஸ்டேடியம் வந்துருச்சு, உங்களால் வாழ்ந்த ஒரே குடும்பம் அந்த அதானி குடும்பம்தான்.

**எஜமான்களை துரத்த வேண்டும்!**

இதையெல்லாம் நீங்கள் மனதில் வைத்துக் கொண்டு எப்படிச் சென்ற 2021 சட்டமன்ற தேர்தலில் அடிமைகளைத் துரத்தி வீட்டுக்கு அனுப்பினோமோ, அடிமைகளுடைய ஓனர்ஸ், எஜமானர்களையும் வீட்டிற்கு நீங்கள் துரத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அதையெல்லாம் நம் மனதில் ஏந்திக் கொண்டு, கழகப் பணியாற்றிட வேண்டும். நம்முடைய கழகக் கொள்கைகளை, கழக அரசினுடைய சாதனை களை, கலைஞருடைய சாதனைகளை எல்லாம் தெரிந்து கொள்ளத்தான் ஒரு கொள்கை மாநாடாக, கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மாநாடாக இளைஞர் அணிக்கு அந்த வாய்ப்பை தலைவர் அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

நீங்கள் அத்தனைப்பேரும் குடும்பத்தோடு வந்து, அந்த மாநாட்டில் கலந்து கொண்டு அந்த மாநாட்டை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு மாநாடாக மாற்றிக் காட்ட வேண்டும் என்று உங்களையெல்லாம் இந்தச் செயல்வீரர்கள் கூட்டம் மூலமாகக் கேட்டுக்கொண்டு, வந்திருக்கும் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு, வாய்பளித்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கலைவாணன் அவர்களுக்கும், சகோதரர் இளையராஜா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

முன்னதாக திருவாரூர் மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கலைவாணன் தலைமை உரை ஆற்றினார். அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் இளையராஜா, ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை உரையாற்றினார்கள். அமைப்பாளர் பனங்குடி குமார் அனைவரையும் வரவேற்று பேசினார். கொரடாச்சேரி வடக்கு ஒன்றிய அமைப்பாளரும் காட்டூர் ஊராட்சி மன்றத் தலைவருமான பிரபாகரன் நன்றி கூறி பேசினார்.

---

### அரியலூர் மாவட்டம் – குன்னம் தொகுதியில்

# ரூ.196.04 இலட்சம் மதிப்பீட்டில் 8 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவங்கி வைத்தார்!

*அரியலூர்,ஆக. 28-*

அரியலூர் மாவட்டம்,குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ.196.04 இலட்சம் மதிப்பீட்டில் 8 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காகவும், மேம்பாட்டிற்காகவும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக செந்துறை ஒன்றியம், இருங்களாக்குறிச்சி கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.106.95 இலட்சம் மதிப்பீட்டில் இருங்கலாக்குறிச்சி முதல் ஆனைவாரி ஓடை வரை சாலை அமைக்கும் பணியினையும், பின்னர் புதுப்பாளையம் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.16.80 இலட்சம் மதிப்பீட்டில் ஆதனக்குறிச்சி புதுப்பாளையம் கிழக்குத்தெருவில் கழிவு நீர் வாய்க்கால் 210 மீ அமைக்கும் பணியினையும், தொடர்ந்து அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆதனக்குறிச்சி புதுப்பாளையம் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.2.53 இலட்சம் மதிப்பீட்டில் ஆதனக்குறிச்சி புதுப்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் துவக்கி வைத்து பணிகளை தரமான பொருட்களை கொண்டு விரைவில் முடித்திட சம்மந்தப்பட்ட அலுலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து ஆதனக்குறிச்சி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.8.63 இலட்சம் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம் அமைத்தல் பணியினையும், பின்னர் முதுகுளம் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.11.27 இலட்சம் மதிப்பீட்டில் ஆதனக்குறிச்சி முதுகுளம் அய்யனார் குளம் ஆழப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் பணியினையும், அதனைத் தொடர்ந்து ஆலத்தியூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் அருந்ததியர் தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், பின்னர் முள்ளுக்குறிச்சி கிராமத்தில் நபார்டு கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.42.36 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறைகளுடன் கூடிய பள்ளிக் கட்டடம் கட்டும் பணியினையும் துவக்கி வைத்த பின்னர், பள்ளி மாணவர்களிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் செயல்படுத்தப்பட்டுள்ள முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்ததுடன் அரசின் திட்டங்களை முறையாக பயன்படுத்திக்கொண்டு படித்து வாழ்கையில் முன்னேறுவதுடன், பெற்றோர்களுக்கும், அரியலூர் மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழிலரசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், ஜாகிர் உசைன், ஊராட்சிமன்றத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்டபலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், ஆதனக்குறிச்சி முதுகுளம் அய்யனார் குளம் ஆழப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் பணியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

---

### திருச்சி மாவட்டக் கழக முன்னோடி

# வீகேயென் பாண்டியன் மறைவு!

## அமைச்சர் கே.என்.நேரு - முன்னணியினர் அஞ்சலி!

*திருச்சி, ஆக. 28 -*

திருச்சி மாவட்டக் கழக முன்னோடி வீகெயென் பாண்டியன் என்கிற ஆ. பொன்னு பாண்டியன் (வயது 68) கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை 6 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



தகவலறிந்து அமைச்சர் கே.என்.நேரு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து திராவிடர் கழக தலைமை நிலைய செயலாளர் வீ அன்புராஜ். மாவட்ட செயலாளர் காடுவெட்டி ந.தியாகராஜன். மத்திய மாவட்ட செயலாளர் க.வைரமணி, மேனாள் முதல்வர் மக்கள் தொடர்பு அலுவலர் ஓய்வு மதுரை மருதவிநாயகம், தொழிலதிபர் வீகேயென் கண்ணப்பன் (எ) நாராயணன், வி.எஸ்.பி. இளங்கோவன், மண்ணச்சநல்லூர் த.காளியப்பன், திருச்சி திருமலைவாசன், திருச்சி சின்னசாமி , மேயர் மு.அன்பழகன், எஸ் ஏ அம்பிகாபதி, பானுமதி கண்ணன், மனோகரன், முரசொலி சேது குடும்பத்தினர், முரசொலி ராஜேந்திரன், தொழிலதிபர் வீகேயென் ராஜா, மண்ணச்சநல்லூர் ஸ்ரீதர் , கே. பி. ஏ. செந்தில் , செந்தில்குமார், ரவிகுமார், தங்காத்தாள், திருச்சி பெரியார் மாளிகை சுப்ரமணியன், மதுரை அன்பு, திருப்பூர் நாச்சிமுத்து,. பாலு, திருமங்கலம் பரமன், தினகரன் முகமது மீரான், நைனா முகமது சென்னை, திருச்சி உசேன், பென்னமராவதி பழனியப்பன், செவலூர் குணசேகரன், திருவரங்கம் சீனிவாசன், விஜயராமன், நாராயணன் , எஸ் ஆர் எம் சம்பத்குமார் குடும்பத்தினர்,

குமரன், புளு மெட்டல் பிரபாகரன், செல்வம், மாநிலத் தலைவர் இருசக்கர வாகன பழுது நீக்குவோர் சங்கம், பி.எச்.இ.எல். சவரிமுத்து, சுந்தர் ராஜன், சந்திரசேகரன், விஜயகுமார், தனபால், பி. எச். இ. எல். மேலாளர்கள், கோபண்னா, பாலசுப்ரமணியம், ஐவான், பிரசன்னா, வேலா, வடிவேல், சக்திவிலாஸ், வெங்கடேசன், மெடிக்கல் கிருபானந்த மூர்த்தி,

ஜுவெல்லரி மனோகரன், தாமரை பேப்பர்ஸ் சுரேஷ், டாடா பைனான்ஸ் சுந்தர், பங்க் கண்ணன் (எ) கோவிந்தராஜுலு, பசீர் அகமது, தேவராஜ், ராஜேந்திரன், ராதாகிருஷ்ணன் ராஜேந்திரன், சரவணன், அன்பழகன், சம்பத், வீகேயென் ஊழியர்கள் நமச்சிவாய மூர்த்தி, உதயகுமார், ஆனந்த்,

மண்ணச்சநல்லூர் நகர நிர்வாகிகள் சி.ஜெயபாலன், மனோகரன், ராஜேந்திரன், இளங்கோவன், கார்த்திகேயன், பாலமுருகன், கண்ணன், தர்மலிங்கம், லட்சுமி, தேவதாஸ், மணிமாறன், செந்தில் வேலன், சிவகுமார், உதயகுமார், சந்திரசேகர், சிவா, ராஜாராம், இலக்கியராஜன், ரெங்கராஜ், சிவசுப்ரமணியன், மகேந்திரன், கண்ணன், சித்தன், ராமரத்தினம், இளைஞரணி மருது சேகர், காரல் மார்க்ஸ், முருகானந்தம், சுகுமார் அசோகன், காசிசரவணன், மண்ணை சரவணன், கதிரேசன், செந்தில், சிவலிங்கம், சுப்ரமணியன், ஐ ஒ பி ரவி, பாலு, திருப்பைஞ்ஞீலி ஜெகநாதன், சண்முகம், பவித்ரம் ஆசைதம்பி, திண்டுகல் ராணி நாகரத்தினம், வாத்தலை சுந்தர்ராஜ், கரூர் தண்டபாணி, சீனிவாசன். செல்வராஜ், மன்ற உறுப்பினர்கள் சக்திவேல், அமுதா, ராதாகிருஷ்ணன், ராஜா, சந்திரசேகர், அரிமா சங்க நாகராஜன், மோகன்ராஜ், டென்சிங், ஆறுமுகம், எம் என் பாலு, சத்தியமூர்த்தி, பிரவீன்குமார், கார்த்தி, ராஜேஷ், சமயபுரம் பேரூராட்சி தலைவர் சரவணன், கவுன்சிலர்கள் பிரவீன், குட்டி வசந்த்ராஜ் சமயபுரம் நகர நிர்வாகிகள் துரை.ராஜசேகரன், சுரேஷ், பெரியார் செல்வம், துரைபிரபு, வீரமணி, பாலசுப்ரமணியன், சேதுலெட்சுமணன், சேதுராமன், முருகன், சிவாமாரியப்பன்,

தந்தை பெரியார் தி. க. சீனி விடுதலை அரசு, திருவரங்கம் சிவாஜிசண்முகம், காங்கிரஸ் வில்ஸ்முத்துகுமார், ரவீந்திரன், ஞானகுரு, முகுந்தன், திருச்சி ஜீவானந்தம், முரளிசாந்தி, தனசேகரன், குருநாதன், பால் ஜெயசேகரன், மணிகண்டன், ஆண்டரூ, சீனிவாசன், அண்ணா துரை, ஸ்ரீராஜ் வசந்தகுமார், ராஜ்குமார், பிரபு, அஜந்தா நாகராஜ், குணா, செந்தண்ணீர்புரம் பாஸ்கரன், செந்தில், சரவணன், கிழக்குறிச்சி விஸ்வநாதன், ராஜு, லோகநாதன், மோகன், கிருஷ்ணமூர்த்தி

மண்ணச்சநல்லூர் பேரூராட்சி ஊழியர்கள் அழகேந்திரன், தேன்மொழி, கிருஷ்ணமூர்த்தி, பார்கனி, பழனியாண்டி, கணேசன், சுரேஷ்குமார், சதீஸ், பாண்டியன், சரவணன், அமுதா, பூபதி, பழனியப்பன், விஸ்வநாதன், சாந்தி, தமிழரசன், ராஜு, புவனேஸ்வரி மற்றும் தூய்மை பணியாளர்கள் , மாநில சோழிய வேளாளர் சங்க நிர்வாகிகள் தங்கம் ரெத்தினகுமார், டைமன் பாலு, பேரா. கங்கைமணி, திருநாவுக்கரசு, மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினர்.






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்தை பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் ஆகியோர் உடனிருந்தனர்.







நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் மயிலாடுதுறையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. சேலம் இளைஞர் அணி மாநாட்டினை எழுச்சியோடு நடத்துவதற்கான ஆலோசனைகளை இளைஞரணி நிர்வாகிகள் – உறுப்பினர்களுக்கு இளைஞர் அணிச்செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை வழங்கி உரையாற்றினார்.


கலைஞர் 100
1924 - 2023
பெரம்பலூர்-அரியலூர் மாவட்ட
இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகைதரும்
மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உயர்திரு. கழக இளைஞரணி செயலாளர் அவர்களே
வருக! வருக!!
இவண்,
ஆ.இராசா MP
கழக துணை பொதுச்செயலாளர்
சா.சி.சிவசங்கர்
அரியலூர் மாவட்ட கழக செயலாளர்
தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர்
குன்னம் சி.இராஜேந்திரன்
பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்
மாவட்ட ஊராட்சி தலைவர்
இவண்,
பெரம்பலூர் - அரியலூர் மாவட்ட தி.மு.க.




பெரம்பலூர்-அரியலூர் மாவட்டத்திற்கு
பல்வேறு துறைகள் தொடர்பாக ஆய்வு கூட்டத்திற்கு வருகைதரும்...

மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞரணி செயலாளர்

உயர்திரு **உதயநிதி ஸ்டாலின்** அவர்களே

வருக! வருக!!

இவண்,

**ஆ.இராசா** MP
கழக துணை பொதுச்செயலாளர்

**சா.சி.சிவசங்கர்**
அரியலூர் மாவட்ட கழக செயலாளர்
தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர்

**குன்னம் சி.இராஜேந்திரன்**
பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்
மாவட்ட ஊராட்சி தலைவர்

**பெரம்பலூர் - அரியலூர் மாவட்ட தி.மு.க.**

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

# நாளேடுகளின் பாராட்டு!

THE HINDU

From Page One

## CM launches expansion of breakfast scheme



Chief Minister M.K. Stalin having breakfast with students at Tirukkuvalai in Nagapattinam district on Friday. PTI

The government provided nutrient supplements to them; as a result, 62,000 children recovered from malnutrition.

Mr. Stalin said the breakfast scheme was aimed at eradicating hunger by enhancing the nutritional status and reducing malnutrition among children. It would also help to ease the burden on working mothers and increase the attendance and retention of children in schools.

Quoting the verses '*Undi koduthor uyir koduthorey*' (those who give nourishment to living beings in this world give precious life itself) from *Manimegalai*, one of the five Tamil epics, he said, "Though the government has been implementing many flagship schemes, such as free bus travel for women and *Pudhumai Penn*, the breakfast scheme is close to my heart and gives me immense satisfaction as it aimed at eradicating hunger, malnutrition, and anaemia among school children."

The Chief Minister urged officials to ensure the effective implementation of the scheme and appealed to the students to study well and enhance their skills. "Those who achieved success through struggles found a place in history. The government will continue to execute welfare measures following the principles of social justice and [following in the footsteps of] the leaders of the Dravidian movement."

THE TIMES OF INDIA

TIMES CITY

## Dravida model giving life to kids: CM

### Launches Breakfast Scheme Extension

TIMES NEWS NETWORK



R Baskar

17 LAKH CHILDREN BENEFITED: CM M K Stalin inaugurated the extension of the chief minister's breakfast scheme at a government middle school in Thirukkuvalai on Friday

**Nagapattinam:** Chief minister M K Stalin on Friday said the breakfast scheme was the most important of his dravida model government, which now benefited 17 lakh children of Classes I to V in 31,000 government schools across the state.

He was speaking after inaugurating the extension of the scheme at the government middle school at Thirukkuvalai, where his father M Karunanidhi studied.

Stalin later had breakfast with the students.

"Though I have implemented many schemes for the benefit of the people, this breakfast scheme gives me immense satisfaction. There is a saying that 'undi koduthor uyir koduthor' in Tamil, which means 'one who gives food is a giver of life'. So, our dravida model government is giving life to our children," he said.

"The money spent is an investment for the better future of our children. This investment will return in the form of knowledge and skill that will build our country," Stalin said.

The chief minister launched the scheme on September 15, 2022, in Madurai. The first phase covered 1.14 lakh children in 1,545 corporation, municipality and panchayat schools. As many as 1.54 lakh students in 1,968 schools were brought under the scheme from February 28.

Taking a dig at governor R N Ravi, the CM said, "The DMK government is running a social justice regime that gives everything to everyone. But there are a few people who put barriers to our principles in the name of NEP 2020 and NEET. In those days, the Ekalavya offered his thumb (to Dronacharya). Times have changed. It is not the time of Dronacharyas but of Ekalavyas," he stated.

In Chennai, youth welfare minister Udhayanidhi Stalin said attendance of students had increased by 30% to 40% following the scheme's launch last year.

He had food along with students at a school in Triplicane. HR & CE minister P K Sekar Babu and health minister Ma Subramanian launched the scheme in their constituencies while in Trichy, minister K N Nehru launched the scheme. In Madurai, commercial taxes minister P Moorthy inaugurated the scheme at Chinnapatti panchayat union primary school.

Information technology minister Palanivel Thiaga Rajan, accompanied by mayor V Indrani Ponvasanth and others, had food with students at Muthupatti Government Kallar High School.

THE NEW INDIAN EXPRESS



Chief Minister M K Stalin enjoys breakfast with students of Panchayat Union Middle School in Thirukkuvalai on Friday

## STALIN EXTENDS BREAKFAST SCHEME TO ALL TN SCHOOLS

EXPRESS NEWS SERVICE
@ Nagapattinam

CHIEF MINISTER M K Stalin on Friday inaugurated the expanded breakfast scheme for primary schoolchildren across the state at the Panchayat Union Middle School in Thirukkuvalai in Nagapattinam. About 17 lakh students in 31,008 state-run primary schools would benefit where his father and former CM M Karunanidhi had studied. The CM expressed happiness about the expanded scheme being rolled out from his ancestral village.

Recalling his interaction with students during a school visit in Chennai last year where they said they have not had breakfast at home, the CM said, "A person needs to have a full stomach and has to eat three times to think and work. Breakfast is crucial. How can students focus on studies without having their breakfast? I thought students should not be educated without providing them food. We then initiated the breakfast scheme."

The CM credited P T Thiyagarayar and his predeces-

தலையங்கம்

தினத் தந்தி DAILY THANTHI

26.8.2023 (சனிக்கிழமை)

## பசிப்பிணியை போக்கும் காலை உணவு திட்டம்!

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார், வள்ளலார். அதுபோல, இளந்தளிர்கள் பசியால் வாடி நின்றபோதெல்லாம் நமது தலைவர்களின் உள்ளத்தில் கருணை பெருக்கெடுத்து ஓடி, அவர்களின் பசியை போக்கும் திட்டங்கள் உருவாகின. திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியிலுள்ள ரெயில்வே கேட் மூடியிருந்ததால், அந்த வழியே சுற்றுப்பயணம் சென்ற காமராஜர், காரை விட்டு இறங்கி நின்ற நேரத்தில், மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனை பார்த்து, "நீ ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை?" என்று கேட்டிருக்கிறார். தன்னிடம் பேசுவது முதல்-அமைச்சர் என்பதை அறியாத அந்த சிறுவன், "பள்ளிக்கூடத்துக்கு போனால் யார் சோறு போடுவார்கள்?" என்று கூறியிருக்கிறான். "சோறு போட்டால் பள்ளிக்கூடம் போவாயா?" என்று காமராஜர் கேட்க, "போவேனே" என்று உற்சாகமாக அந்த சிறுவன் அளித்த பதில்தான், காமராஜர்




DECCAN Chronicle

SCHOOL B'FAST SCHEME

## Model scheme from land of social justice

G BABU JAYAKUMAR | DC
CHENNAI, AUG. 25



Chief Minister MK Stalin enjoys breakfast with school children at Tirukavalai in Nagai district Friday. — DC

The expansion of the Chief Minister's Breakfast Scheme to schools all over the State on Friday is undoubtedly a model development scheme for the entire country to follow since it basically addresses the problem of hunger, about which even the United Nations is concerned about and has set 2030 as the target year for creating a world free of hunger.

Though Tamil Nadu ranks higher than most of the States in the country on various development indices, including hunger, Chief Minister M K Stalin latest attempt at eradicating malnutrition among school going children is a commendable measure for it would go a long way in ensuring not only a healthy State but also an educated society.

For poverty breeds illiteracy as hungry children cannot concentrate on their studies in classrooms. So by providing breakfast to children studying in Classes one to five in government schools, the Chief Minister has minimised the possibility of students dropping out of school. Otherwise, unable to bear the pangs of hunger, children just drifted away from education ■ P7

தினகரன் Dinakaran

நாட்டில் முதல்முறையாக தமிழ்நாடு முழுவதும்

## 31,000 அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டம்

■ திருக்குவளையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார் ■ 17 லட்சம் மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர்



காலை உணவுத்திட்டத்தின் 5 நோக்கங்கள்

தினமணி

## காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

திருக்குவளையில் முதல்வர் தொடங்கி வைத்தார்



பசிப்பிணி நீங்கிவிட்டால், மனநிறைவோடு பிள்ளைகள் படிப்பார்கள். அவர்கள் மனதில் பாடங்கள் பதியும். பள்ளிக்கு ஆர்வத்துடன் வருவார்கள். சீரான வருகைப் பதிவும் இருக்கும். தமிழகத்தின் கல்வி விகிதமும் அதிகரிக்கும்.
- முதல்வர் மு.க.ஸ்டாலின்

தினகரன்

ஆகஸ்ட் 26, 2023 சனிக்கிழமை

## வரலாற்றின் புதிய துவக்கம்

தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கடந்த வருடம் செப்டம்பர் 15-ம் தேதி மறைந்த முதலமைச்சர் அண்ணா பிறந்தநாள் அன்று, 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வரும் 1,545 தொடக்க பள்ளிகளில் ₹33.56 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1.14 லட்சம் மாணவ-

தினத் தந்தி DAILY THANTHI

## 17 லட்சம் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம்

செய்தி 3-ம் பக்கம்

### திருக்குவளையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்

தமிழ்நாட்டில் அனைத்து அரசு பள்ளிக்கூடங்களிலும் காலை உணவு விரிவாக்க திட்டத்தை கருணாநிதி பிறந்த திருக்குவளையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின் மூலம் 17 லட்சம் மாணவ, மாணவிகள் பயன் அடைவார்கள்.



தஞ்சாவூர், ஆக.26- தமிழக சட்டசபையில் கடந்த 7.5.22 ...

இந்து தமிழ் திசை

17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில்

## காலை உணவு திட்டம் தமிழகம் முழுவதும் விரிவாக்கம்

● திருக்குவளையில் தொடங்கிவைத்த முதல்வர் ஸ்டாலின், கல்வி கற்க எதுவும் தடையாக இருக்க கூடாது என்றார்.

● நாகப்பட்டினம்

நாகை மாவட்டம் திருக்குவளையில், முன்னாள் முதல்வர் கருணாநிதி படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், காலை உணவு விரிவாக்க திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். கல்வி கற்க எந்த காரணமும் தடையாக இருக்க கூடாது என்பதில் அரசு உறுதியாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.







தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திருக்கோயிலூர் சட்டமன்ற தொகுதி ஆலம்பாடி ஊராட்சியில் பகுதி நேர நியாயவிலைக் கடையை திறந்து பொதுமக்களுக்கு விலையில்லா அரிசி மற்றும் நியாயவிலைக் கடை பொருட்களை வழங்கினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் சி. பழனி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி. என். முருகன், இரா. கற்பகம், ஒன்றியச் செயலாளர்கள் ஜி. இரவிச்சந்திரன், பி. வி ஆர். விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர்கள் தனலட்சுமி உமேஸ்வரன், ஓம் சிவ சக்திவேல் , மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் இராஜிவ்காந்தி கழக நிர்வாகிகள் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



குன்றத்தூர் அடுத்த செம்பரம்பாக்கம் ஏரியில் தவறி விழுந்து இறந்த 'நீட்' தேர்வில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்கள் ரிஷிகேஷ் மற்றும் ஹரிஷ் ஆகிய இருவர் உடல்களுக்கும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சார்பில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

## விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு அறிவிப்பு





விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் 30-08-2023 புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் விருதுநகர் கந்தசாமி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் வி.தங்கராஜ், எஸ்.செல்வமணி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள்,நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். பொருள் : கழக இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் பொற்கிழி வழங்குதல் சம்பந்தமாக.

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்**
செயலாளர் , விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.

**அமைச்சர் தங்கம் தென்னரசு**
செயலாளர் . விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.டி.எஸ். மணி

**ஆகஸ்ட் 28 (1993)**



செங்கல்பட்டு மாவட்டத்தின் தி.மு.க. முன்னோடிகளில் ஒருவர். தி.மு.க. நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர்.

செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகவும் காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர்-மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண விவரம்

கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு மற்றும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். அந்தப் பயண விவரம் வருமாறு.

| 28-08-2023 திங்கள்கிழமை | | |
|---|---|---|
| காலை 11.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| இரவு 7.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலை, பெரம்பலூர் | அரியலூர் & பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| **29-08-2023 செவ்வாய்க்கிழமை** | | |
| காலை 10.30 மணி | கழுதூர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் | கடலூர் கிழக்கு & மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |

அன்பகம், சென்னை – 18.

நாள் : 25–08–2023.

### நிவேதா எம்.முருகன் தலைமை! மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்ட தி.மு.க.

# இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்! அமைச்சர் உதயநிதிஸ்டாலின் சிறப்புரை!

### அமைச்சர்கள் அன்பில்மகேஷ்பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா பங்கேற்பு!

நாகை. ஆக.28-

மயிலாடுதுறை மாவட்டம், காரைக்கால் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் மயிலாடுதுறை சுப்பர மணியபுரத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.இளையராஜா, மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கோ.சி. திருமா வளவன், எம்.எஸ். விஜய், ஜே.கே.வினோத் பாண்டியன், எஸ்.ஆனந்த்ன், சௌ.சர்வேதயன், ஜி.ஜுபை யர்அகமது, காரைக்கால் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள்ஏ.பாலசந்தர், எஸ்.டி.பி.டி.பிரபு, எம். முகம்மதுஹாரிஸ், ஏ.ராம்பிரசாத், ஏ.எஸ். ஆர்.சுரேஷ்ரூபன், வி.வெற்றிச்செல்வன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். கே.மருது வரவேற்றார். கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி, சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் மு.பன்னீர்செல்வம், காரைக்கால் மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்,எச். நாஜிம், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டா மணி (எ) என்.செல்வராஜ், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என்.விஜயபாலன், எம்.பன்னீர்செல்வம், எம். எம்.சித்திக், டி.மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, இராம. இளங்கோவன் எம்.நாகதியாகராஜன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கொள்ளிடம் மேற்கு செல்ல.சேதுரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர்விழிதிருமாவளவன், மயிலாடுதுறை வடக்கு என்.இளையபெருமாள், மயிலாடுதுறை மத்தியம் ஞான.இமையநாதன், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, மயிலாடுதுறை மேற்கு மூவலூர் மூர்த்தி, செம்பனார்கோயில் வடக்கு பி.எம்.அன்பழகன், செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த.விஜயகுமார், குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், குத்தாலம் வடக்கு கு.வைத்தியநாதன், குத்தாலம் மேற்கு ஏ.ஆர். ராஜா, சீர்காழி மேற்கு ஏ.ஜி.ஜெ.பிரபாகர், சீர்காழி கிழக்கு பஞ்சுகுமார், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ.காந்தி, நத்தம் வின்சென்ட், எஸ்.வெற்றிவேல், எஸ்.சங்கரநாராயணன், எஸ்.சுவாமிநாதன், ஜெ.கபிலன், ஹர்ஷசத், பி.கென்னடி, சுபாநெடுஞ்செழியன், பேரூர் கழகச் செயலாளர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எம்.அன்புச்செழியன், குத்தாலம் எம்.சம்சுதீன், தரங்கம்பாடி முத்துராஜா, மணல்மேடு அண்ணாதுரை , மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஷ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், நந்தினிஸ்ரீதர், காமாட்சிமூர்த்தி, மகேந்திரன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்க்காபரமேஷ்வரிராமச்சந்திரன், பேரூராட்சி தலைவர்கள் சுகுணா சங்கர்குமரவேல், பூங்கொடிஅலெக்சாண்டர், சங்கீதா மாரியப்பன், கண்மணிஅறிவழகன், மாவட்ட சார்புஅணி அமைப்பாளர்கள் இராம. சேயோன், இரா.முருகப்பா, இரா.மனோகரன், வை.சௌமியன், ஆர்.முருகன், லதாசுப்பரமணியன், எஸ்.எம்.சம்சுதீன், டி.ராஜ்குமார், காழிகலைவாணன், பெரு.வீரமணி, ஆர்.செல்வராஜ், எம்.எஸ்.முத்துகுபேரன், தீபாசத்தியேந்திரன், கே.தேசப்பன், ஆர்.எஸ். ஸ்ரீதர், கே.விக்னேஷ்,வெடிபாலமுருகன், ஆர்.தன்ராஜ் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின்நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்தமுன்னோடிகள், கழகத்தினர், கழக இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர். முடிவில் காரைக்கால் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முஹம்மதுரிபாஸ் நன்றி கூறினார்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்: வரலாற்றின் புதிய துவக்கம்!

# தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் உச்சரிக்கப்படும் திட்டம்!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பெருமிதம்!

சென்னை, ஆக. 27-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வரலாற்றின் புதிய துவக்கமெனவும் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் உச்சரிக்கப்படும் திட்டமெனவும் 'தினகரன்' நாளேடு 26.8.2023 தேதியிட்ட இதழில் 'வரலாற்றின் புதிய துவக்கம்' என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கடந்த வருடம் செப்டம்பர் 15ம் தேதி மறைந்த முதலமைச்சர் அண்ணா பிறந்த நாள் அன்று, 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்பு களின்கீழ் செயல்பட்டு வரும் 1,545 தொடக்க பள்ளிகளில் ரூ.33.56 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1.14 லட்சம் மாணவ- மாணவிகள் பயனடைந்து வந்தனர். அத்துடன், இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள பள்ளிகளில் மாணவர்களின் வருகைப்பதிவும் அதிகரித்துள்ளது. இதையடுத்து, 31,008 அரசு பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் இத்திட்டத்தை விரிவுபடுத்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்.

இதற்காக, இந்த நிதியாண்டில் ரூ.404 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு, ஒரு குழந்தைக்கு, 50 கிராம் அளவில் ரவை, கோதுமை, அரிசி, சிறுதானியங்கள் போன்றவை 15 கிராம் பருப்பு, உள்ளூரில் கிடைக்கும் காய்கறிகள் வழங்கப்படுகின்றன. சமைத்த உணவு, 100 முதல் 200 கிராம் வரையிலும், 60 கிராம் காய்கறியுடன் கூடிய சாம்பாரும் வழங்கப்படுகிறது. சமைத்த உணவை,



தினகரன்
ஆகஸ்ட் 26, 2023 சனிக்கிழமை
வரலாற்றின் புதிய துவக்கம்
தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கடந்த வருடம் செப்டம்பர் 15-ம் தேதி மறைந்த முதலமைச்சர் அண்ணா பிறந்தநாள் அன்று, 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வரும் 1,545 தொடக்க பள்ளிகளில் ₹33.56 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1.14 லட்சம் மாணவ-மாணவிகள் பயனடைந்து வந்தனர். அத்துடன், இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள பள்ளிகளில் மாணவர்களின் வருகைப்பதிவும் அதிகரித்துள்ளது. இதையடுத்து, 31,008 அரசு பள்ளிகளில்

பள்ளி மேலாண்மை குழு ருசி பார்த்த பிறகே, மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை, இந்த திட்டத்தின்கீழ், காலையில் உப்புமா, ரவா கிச்சடி, ரவா கேசரி, காய்கறி சாம்பார் உள்ளிட்ட பல்வேறு வகை உணவுகள் மாணவமாணவிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது இதில் கூடுதல் உணவு வகைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அனைத்து குழந்தைகளுக்கும் காலை 8 மணி முதல் 8.50 மணிக்குள் சிற்றுண்டி வழங்கவேண்டும், கலப்படமின்றி உணவு சமைக்கப்பட வேண்டும். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் மீண்டும் பயன்படுத்தக்கூடாது, உணவு வழங்கும் முன், பள்ளி மேலாண்மை குழுவினர் அதை உண்டு பார்த்து, பின்னர் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும் என்று ஏற்கனவே அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே உத்தரவு தற்போதும் தொடர்கிறது. தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டுள்ள இந்த காலை உணவு திட்டத்தின் மூலம், 18 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகிறார்கள்.

மறைந்த முதல்வர் கலைஞர் பயின்ற திருக்குவளை ஊராட்சி ஒன்றிய பள்ளியில், முதல்வர் மு.க. ஸ்டாலின் இத்திட்டத்தை நேற்று தொடங்கி வைத்தார். அவர், 25 பள்ளி குழந்தைகளுடன் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டார். உணவின் சுவை குறித்து மாணவ, மாணவிகளிடம் விசாரித்துக் கொண்டே முதல்வர் சாப்பிட்டார். உணவு எப்படி இருந்தது என்பது குறித்து சிறுவர் சிறு மிகளும், கூச்சப்படாமல் முதல்வருடன் பேசிக்கொண்டே உணவருந்தினர். சிறுவர், சிறுமி களின் பேச்சைக்கேட்டு முதல்வர் மனம் மகிழ்ந்தார். முதல்வருடன் அமர்ந்து உணவருந்திய மாணவர்களும் பூரித்துப்போயினர்.

மாணவ, மாணவிகள் பசியின்றி பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமல் இருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாக கொண்டு இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. "திருக்குவளையின் நேற்றைய நிகழ்ச்சி வரலாற்றின் புதிய துவக்கம்" என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுவே, தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் உச்சரிக்கப்படும் ஒற்றை வரி ஆகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) காட்டூரில் இருந்து திருவாரூர் வரும் வழியில் கிருஷ்ணமூர்த்தி பேரன் மணமகன் ஹரிகிருஷ்ணன், மணமகள் அனிதா ஆகியோரை சந்தித்து வாழ்த்தினார்.


நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திருவாரூர் வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்தை பார்வையிட்ட பின் அப்பகுதியில் உள்ள சிறுவர், சிறுமியர் மற்றும் பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

நாடாளுமன்றத் தேர்தலில் கழகக் கூட்டணி வெற்றி வாகை சூடிட பேருழைப்பு நல்குவோம்!

# தலைவர் கலைஞரின் திரைப்படங்களை நாடு முழுவதும் திரையிடுவோம்!

## கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில - மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

## பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

திருச்சி, ஆக.28-

திருச்சியில் நடைபெற்ற கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு பேரவையின் சார்பில் நாடு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் திரைப்படங்களைத் திரையிடுவது எனவும், கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்களை ஒப்பிக்கும் போட்டிகள் நடத்துவது எனவும் - நாடாளுமன்றத் தேர்தலில் கழகக் கூட்டணியின் வெற்றிக்கு பேரவையின் சார்பில் கடும் உழைப்பினை நல்குவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில அளவிலான மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் 24.8.2023 வியாழக் கிழமை காலை 10 மணி அளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகித்தார் மாநிலச் செயலாளர்கள் பொள்ளாச்சி மா. உமாபதி, திருவாரூர் அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், தில்லை செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநிலத் துணைச் செயலாளர்கள் மதுரை சி.வீரகணேசன், கவிஞர் நன்மாறன், எழில் மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், கே.வி.குப்பம் சி.கோபி. ஜாகிர் உசேன் ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் அனைத்து மாவட்டத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாடு முழுவதும் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்களை திரையிடுவது குறித்தும் , பள்ளி மாணவ -மாணவியருக்கு கலைஞரின் திரைக்கதை வசனங்கள் கவிதைகளை ஒப்பிக்கும் போட்டிகள் நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. புதிதாக நியமிக்கப் பட்ட பேரவையின் நிர்வாகிகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தலைவர் கலைஞர் திரைப்படங்களை நாடு முழுவதும் திரையிடல்!**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடும் வகையில், கலைஞரின் பகுத்தறிவுச் சீர்திருத்தக் கருத்துகள் அடங்கிய கனல் தெறிக்கும் வசனங்கள் கொண்ட திரைப்படங்களை ஊர் தோறும் பொது இடங்களில், பூங்காக்களில், திடல்களில், பள்ளிகளில் திரையிட வேண்டும் என்று கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைக்கு அறிவுரை வழங்கிய தலைமைக் கழகத்திற்கு பேரவை தனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**கலைஞரின் கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஒப்புவிக்கும் போட்டி!**

வெறும் புராண இதிகாசக் கதைகளை மட்டுமே முன்னிலைப்படுத்தி கதை, வசனங்கள், பாடல்கள் மிகுந்திருந்த தமிழ்த் திரை உலகில், முதன்முதலாக சமூக அரசியல் சீர்திருத்தக் கருத்துகளை தனது அனல் கக்கும் எழுத்துகளால் திரைப்பட உரையாடல்களாக்கி தமிழ்த் திரையுலகில் மாபெரும் கருத்துப் புரட்சியை ஏற்படுத்தியவர் நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞரின் திரைப்பட வசனங்களை இன்றுள்ள மாணவர் சமுதாயத்திடம் அறிமுகப்படுத்தி பகுத்தறிவு, சீர்திருத்தக் கருத்துகளால் தமிழ் உணர்வையும் தன்மான உணர்வையும் மிளிரச் செய்திட "கலைஞரின் திரைக்கதை வசனங்கள், கலைஞரின் கவிதைகள் ஒப்புவிக்கும் போட்டி'யை மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் சிறப்பாக நடத்தி, வெற்றி பெறும் மாணவர்களுக்கு கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் பரிசுகள் வழங்கிப் பாராட்டுவது எனத் தீர்மானிக்கப்படு கிறது.

**மணிப்பூர்: ஒன்றிய அரசுக்கு கண்டனம்**

"பெண்ணைத் தெய்வமாகப் போற்றுகிறோம், வணங்குகிறோம்" என்று பேசிக் கொண்டே,மணிப்பூர் மாநிலத்தில் கும்கி இனப் பெண்களை நாகரிகமும் மனிதநேயமும் அற்ற முறையில் தெருக்களில் நிர்வாணமாக இழுத்துச் சென்ற சங் பரிவார் கும்பலையும் அவர்களைக் கண்டு கொள்ளாமல் இந்த வன்கொடுமையை வேடிக்கை பார்த்த மணிப்பூர் மாநில அரசையும் மொத்தக் கொடுமைகளுக்கும் காரணமான ஒன்றிய மோடி அரசையும் இப் பேரவை வன்மையாக கண்டிக்கிறது.

அத்துடன் பல மாதங்களாக நடைபெறும் மணிப்பூர் மக்கள் போராட்டத்திற்கு எந்த ஒரு தீர்வும் காண முயற்சிக்காமல் சட்டம் ஒழுங்கு சீர்குலைவைத் தடுக்கும் திறனற்ற வகையில் வேடிக்கை பார்க்கின்றது ஒன்றிய மோடி அரசு. மணிப்பூர் மக்களின் போராட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் முறையான முழுமையான விவாதத்தை நடத்த மறுத்ததோடு அவ் விவாதங்களில் ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்காமல் நழுவிச் சென்றதையும் அம்மக்களின் உணர்வுகளுக்கு எவ்வித மதிப்பும் அளிக்காமல் எதேச்சதிகாரமாக நடந்து கொண்டதையும் இப்பேரவை மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.

**ஆளுநர் ஆர்.எஸ்.எஸ். ரவியை திரும்பப் பெற வேண்டும்**

தமிழ்நாட்டு மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து ஓ.பி.சி. எஸ்.சி. மாணவர்கள் மற்றும் கிராமப்புற மாணவர்களின் மருத்துவப் படிப்பைத் தடுக்கும் வகையில் ஒன்றிய மோடி அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு, "கடந்த கால அடிமை ஆட்சியாளர்களால்" தமிழ்நாட்டில் நுழைக்கப்பட்ட நீட் தேர்வு இதுவரை 21 தமிழ் மாணவர்களின் உயிர்களைப் பலி வாங்கி உள்ளது.

நீட் தேர்வை ரத்து செய்ய நீதியரசர் ஏகே ராஜன் குழுவை அமைத்து மக்கள் கருத்தைப் பெற்று மாட்சிமை பொருந்திய தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் இயற்றிய பின்னும் அதை சட்டத்திற்கும் ஜனநாயகத்திற்கும் விரோதமாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் காலந்தாழ்த்தியதோடு நீட் உள்ளிட்ட சமூகநீதிப் பிரச்சினைகளிலும் மாநில உரிமைச் சிக்கல்களிலும் சர்வாதிகார சனாதனவாதியாக நடந்து கொண்டு வரும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு "சனாதன ஆளுநர் ஆர்.எஸ்.எஸ்.ரவியை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்" என ஒன்றிய அரசை இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி! பாராட்டு!**

நீட் எதிர்ப்பை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று தனது முதல் சட்டமன்ற உரையிலேயே பதிவு செய்ததோடு, நீட் தேர்வை ரத்து செய்யக் கோரும் தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானத்திற்கு குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல் வழங்கக் கோரி தான் ஒரு அமைச்சர் என்றாலும், மாணவர்களின் நலனை முன்னிறுத்திப் போராட்டக் களத்தை அமைத்து, நாடெங்கும் நீட் எதிர்ப்பலைகளை உருவாக்கியிருக்கிற தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் போர்க்குணத்தையும் மக்கள் பற்றையும் கொள்கை உறுதியையும் இப் பேரவை நன்றியோடு பாராட்டுகிறது.

**உச்ச நீதிமன்றத்திற்கு நன்றி!**

பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றும் முயற்சியாக தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம், பல்வேறு சட்டப் போராட்டங்களில் சிக்கியிருந்த நிலையில் மிகுந்த துணிவோடும், கொள்கை உறுதியோடும் அதனை நடைமுறைப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இப்பேரவை நன்றி பாராட்டுவதோடு, சனாதனவாதிகளால் தொடுக்கப்பட்ட வழக்கினை உச்சநீதி மன்றத்தில் திறம்படக் கையாண்டு அதைத் தள்ளுபடி செய்து நீதியைப் பெற்றிருக்கிற திராவிடமாடல் அரசின் சமூகநீதி முயற்சிக்கு இப் பேரவை தமது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறது.

**தளபதியின் வெற்றிக்கு துணை நிற்போம்!**

அகில இந்திய அளவில், நடைபெறுகிற சர்வாதிகார பாசிச மதவெறி சனாதன மோடி ஆட்சியை வீழ்த்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றிடும் முயற்சியாக அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஓரணியில் திரட்டிடும் பணியில் தீவிரம் காட்டி, I.N.D.I.A இண்டியா கூட்டணியை வெற்றிகரமாகக் கட்டமைத்து ஒன்றிய அரசுக்கும் சங் பரிவார் கும்பலுக்கும் பெரும் சவாலாக விளங்குகிற கழகத் தலைவர், தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் ஆதரவளித்துத் துணை நின்று ஜனநாயகத்தையும் சமூகநீதியையும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் பாதுகாத்திடும் வகையில், எதிர்வரும் 2024 நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு புதுவையில் 40 தொகுதிகளிலும் கழகக் கூட்டணி வெற்றிவாகைசூடிட பேரவைதமது பேருழைப்பை நல்கிடும் என்று இக்கூட்டத்தில் உறுதியேற்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் 5-9-2023 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணி அளவில், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" கழக விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு - கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்புரையாற்றிட, தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" தமிழ்நாடு முழுவதும் எழுச்சியுடன் நடத்துவது - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்: 26-8-2023

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி


கழக விவசாய தொழிலாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் கழக விவசாய அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# 30ஆம் ஆண்டு நினைவு நாள்



காஞ்சிபுரம் **கே.டி.எஸ்.மணி**

மறைவு – 28.8.1993

★★★

இறுதி மூச்சு உள்ள வரை

**பெரியார், அண்ணா, கலைஞர்**

வழி நின்ற சுயமரியாதைச் சிங்கம்!

தம் உடலைத் தானம் செய்து

புகழுலகின் உச்சிக்கே சென்றுவிட்ட உத்தமர்!


**அ.இராமமூர்த்தி – இரா.அருளரசன்**

உறவினர்கள், நண்பர்கள். (விம்)

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அன்பில் பொய்யாமொழி

**ஆகஸ்ட் 28 (1999)**



**திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வர்.**

**தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்.**

**1989–91 மற்றும் 1996–99ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


ARASU ARTS
28 ஆகஸ்ட் 2023
சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்
அன்பில் பொய்யாமொழி
அவர்களின் 24ஆம் ஆண்டு நினைவு நாள்
நீங்கா நினைவுகளுடன்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA
தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் / செயலாளர் – திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

# திராவிட மாடல் அரசு 32

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**





## வெற்றியாளர்களை உருவாக்கும் சிற்பிகள்..!

விளையாட்டில் பதக்கமோ கோப்பையோ வெல்வது விளையாட்டு வீரர்களின் கனவு மட்டுமல்ல. அது அவர்களின் பெற்றோர், கல்வி நிறுவனம், பணிபுரியும் நிறுவனம், தங்கள் மாவட்டம், மாநிலம், நாடு எனப் பலரின் கனவும்கூட.

இவ்வளவு பேரின் கனவுகளைத் தங்கள் தோள் மீது சுமந்துகொண்டு களம் காணும் வீரர்களுக்குத் திறமை மட்டும் இருந்தால் போதாது. அந்தத் திறமையை மேலும் மெருகூட்டி, அவர்களின் உடலை வளப்படுத்தி, மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சிகள் தேவை.

அந்தப் பயிற்சிகளை அவை குறித்த அறிவும் அனுபவமும் கொண்ட பயிற்றுநர்களால்தான் வழங்க முடியும். அற்புதமான திறமைகள் இருந்தும் அத்தியாவசியமான பயிற்சிகள் இல்லாத காரணத்தால் வாய்ப்புகளைத் தவறவிட்ட, வாழ்க்கையை வீணடித்த வீரர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.



கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அந்த நிலை மிக தீவிரமாக இருந்தது. கழக அரசு பொறுப் பேற்றதும் விளையாட்டு வீரர்களின் அந்த நிலையை முழுமையாக மாற்ற திட்டமிட்டது. பொறுப் பேற்ற முதல் ஆண்டிலேயே வேலைகள் தொடங்கின. காலியிடங்களில், எந்த ஒரு சிபாரிசு, ஊழல் உள்ளிட்ட பின்வாசல் முறைகளைக் கிஞ்சிற்றும் நினைத்துப் பார்க்காமல் தகுதி, திறமை, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு, புதிய பயிற்றுநர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.





### பயிற்றுநர் வேண்டிய 18 விளையாட்டுகள்!

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பயிற்றுநர் தேவை உள்ள, 18 வகையான விளையாட்டுகளில் இந்தக் காலியிடங்கள் இருந்தன. அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள 139 நிரந்தரப் பயிற்றுநர் பணியிடங்களில், காலியாக உள்ள 87 நிரந்தரப் பயிற்றுநர் பணியிடங்களை நிரப்பி புதிதாகப் பொறுப்பேற்றதும் நம் கழக அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

தொடர்ந்து, 2022-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அனைத்து நாளிதழ்களிலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணைய தளத்திலும் அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் 530-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாகப் பெறப்பட்டன.

முதல் நிலைத் தேர்வில், 225 விண்ணப்பதாரர்கள் தகுதி பெற்றனர். அவர்களில் இரண்டாம் நிலைத் தேர்வில் 189 பேர் தேர்வாயினர். மூன்றாம் நிலைத் தேர்வில் 76 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

#### என்னென்ன விளையாட்டுகளுக்கு நியமனம்?

தடகளம் (20), வில்வித்தை (1), கூடைப்பந்து (7), குத்துச்சண்டை (3), கையுந்துபந்து (3), கால்பந்து (5), வாள் சண்டை (3), ஜிம்னாஸ்டிக்ஸ் (2), கைப்பந்து (6), ஹாக்கி (7), ஜூடோ (2), கபடி (4), நீச்சல் (6), டேக்வாண்டோ (1), டென்னிஸ் (2), பளுத் தூக்குதல் (2), மல்யுத்தம் (1), வூஷு (1)

ஆண் பயிற்றுநர்கள் : 50

பெண் பயிற்றுநர்கள் : 26

#### எந்தெந்த மாவட்டங்கள்?

நாமக்கல், கன்னியாகுமரி, சென்னை, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், பெரம்பலூர், சிவகங்கை, ஈரோடு, புதுக்கோட்டை, கரூர், தஞ்சாவூர், மதுரை, தூத்துக்குடி, வேலூர், திண்டுக்கல், திருநெல்வேலி, கடலூர், ராமநாதபுரம், திருச்சி, அரியலூர், விழுப்புரம், தேனி, தர்மபுரி, நாகப்பட்டினம்

#### ஊதியம் எவ்வளவு?

மாதம் ரூ. 55,852

### நிரந்தரப் பயிற்றுநர் நியமனம்

அரசு விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி தகுதி பெற்ற 18 விளையாட்டுக்களுக்கான 76 பயிற்றுநர்களும், நிரந்தரப் பயிற்றுநர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

அவர்களுக்கான பணி நியமன ஆணைகளை நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 2023 மார்ச் 17-ஆம் தேதி வழங்கிச் சிறப்பித்தார்.

கடந்த 2012 -ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதாவது 11 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் நிரந்தரப் பயிற்றுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவர்கள் அனைவரும் தமிழ்நாடு முழுவதும் உள்ள விளையாட்டு-உண்டு-உறைவிடப் பள்ளிகளில் பணியாற்றி, அங்குள்ள வீரர்களுக்கு அனைத்து விதமான போட்டிகளில் பங்கேற்கப் பயிற்சிகளை வழங்குவார்கள்.

இந்தச் சிற்பிகள் எண்ணற்ற வெற்றியாளர்களை உருவாக்கட்டும். தமிழ்நாடு பதக்கங்களைக் குவிக்கட்டும்.!

...சாதனை தொடரும்

## இந்துத்துவர்கள் உருவாக்கும் ஆபத்து!



திருப்தா தியாகி, உத்தரப் பிரதேசத்தின் முஸா்ஃபர் நகரில் உள்ள பள்ளி ஒன்றின் ஆசிரியை. இஸ்லாமியச் சிறுவன் ஒருவனைத் தண்டிக்கிறார். அதுவும் எப்படி? ஒவ்வொரு இந்து மாணவனையும் அழைத்து, அவனை அடிக்கச் சொல்கிறார். வேகமாகவே அறைந்த ஒருவனிடம்கூட “ஏன் இவ்வளவு மெதுவாக அடிக்கிறாய்? வேகமாக அடி” என்கிறார். அவனும் முதுகில் பலமாக அடிக்கிறான். “ஒவ்வொரு முஸ்லிம் மாணவனும் இதுபோல அடிக்கப்பட வேண்டும் என்று நான் பிரகடனம் செய்கிறேன்” என்கிறார்.

மாணவன் செய்த குற்றம் என்ன? வாய்ப்பாடு மறந்துவிட்டானாம்!

மாணவனின் தந்தை, “இதுகுறித்துப் போலீசில் புகார் செய்யப்போவதில்லை. பையனை பள்ளியிலிருந்து விலக்கிக் கொள்கிறேன்” என்று சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்குச் சிறுபான்மைச் சமூகம் அச்சத்தில் இருக்கிறது.

இதுபோன்ற ஆசிரியர்கள் என்ன விதைக்கிறார்கள்? இந்த ஆசிரியர்கள் கற்றுக் கொடுப்பதிலிருந்து உந்துதல் பெறும் மாணவர்கள் என்னவாக உருமாறுவார்கள்? பா.ஜ.க. நாட்டைப் பிடித்த சாபக்கேடு. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பா.ஜ.க. ஆட்சியிலிருந்து விரட்டியடிக்கப்படாவிட்டால் நாடு முழுவதும் மணிப்பூராக மாறுவதைத் தடுக்க முடியாது.

-எழுத்தாளர் ஷாஜகான் முகநூல் பதிவு

## ஃப்ளாஷ்பேக்





சிவா-தேவி

### திருமணமும் திட்டமும்!

1998-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 அன்று தளபதி தலைமையில், எனக்கும் எனது இணையர் தேவி அவர்களுக்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. அப்போது சென்னை மாநகராட்சி மேயராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த இன்றைய கழகத் தலைவர் அவர்கள் எனது திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்துவிட்டு, இராணிப்பேட்டையில் **‘அண்ணா மறுமலர்ச்சி’** திட்டத்தையும் தொடங்கி வைத்தார். கட்சிப் பணிக்கும் ஆட்சிப் பணிக்கும் இடையில் தொண்டனின் திருமண விழாவிலும், அவர் பங்கேற்று வாழ்த்தியது இன்றைக்கு நினைத்தாலும் வியப்பை ஏற்படுத்துகிறது.

**-வ.ஏ.சிவா, ஒன்றிய இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், ஆரணி, திருவண்ணாமலை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண் டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சில ஏடுகளும் - கலைஞரும்...

**1972-ஆம் ஆண்டு பத்திரிகைகள் மீது கடும் விமர்சனத்தை முன்வைத்தார் தந்தை பெரியார். “நம் நாட்டில்தான் இந்தப் படியான பத்திரிகைத் தொழிலில் மகா-மகா-மகா அயோக்கியர்கள் இருக்கிறார்கள். பொது மக்கள் தங்கள் இனத்தின் கேட்டுக்காக நடத்தப்படுகிற பத்திரிகைகளைப் படிப்பது எவ்வளவு மானங்கெட்ட ஈனத்தனம் என்பதை வலியுறுத்திக் காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்” எனச் சில பத்திரிகைகளைச் சாடினார். பெரியாரின் உணர்வுகளை, அண்ணாவின் லட்சியங்களை அடித்தளம் சிதையாதவாறு செயல்படுத்திடும் கழகத்தை அழிக்கத் துடிக்கும் சில ஏடுகளை, பெரியார் துணைகொண்டு எதிர்கொண்டவர் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 223




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131